Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 31 • 21.02.2016






மகிந்த ராஜபக்சவின் புதல்வன் யோசித ராஜபக்சவை வெலிக்கடை கூண்டுக்குள் கொண்டு வந்ததுடன் ஆரம்பித்துள்ளது தென்னிலங்கையின் 'மறைமுக யுத்தம்'. இதை ஓப்ரேசன் YOO என்கிறார்கள்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

'ஒப்ரேசன் YOO':

# மகிந்தவின் முள்ளிவாய்க்கால்?



காமுகர்களின் கைகளில் சிக்கி சின்னாபின்னமான இன்னொரு சின்னஞ் சிறுமியின் கதையையும் வரலாறு எழுதி வைத்து விட்டது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

வவுனியா மாணவி ஹரிஸ்ணவி கொலை

# தொடரும் வித்தியாக்களின் கதை...





வடமாகாணசபைக்கு வாஸ்து பிழையா? 4



மிதிபடும் கிராமங்க 8



எக்ஸாம் என்ரரெயின்மென்ற் 10

உள்ளே...

# பேசுவதும் போராட்டம்தான்!

இலங்கை விரைவில் புதிய அரசியல் யாப்பொன்றை நோக்கி செல்லப் போகிறது. தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தை வைத்துக் கொண்டு, இனப்பிரச்சனை தீர்வு விவகாரத்தில் ஓரடி கூட முன்னகர முடியாதென்பதை இரத்தத்தாலும், சதையாலும் வரலாறு எழுதிவிட்டு சென்றுவிட்டது. ஆகவே அதனை கைவிட்டு புதிய அரசியலமைப்பின் தேவையை ஒட்டுமொத்த இலங்கையும் உணர்ந்துள்ளது.

அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள், பொதுஅமைப்புக்களிடம் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான கருத்தறியும் அமர்வுகளை நடத்தி முடித்துவிட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களில் மக்கள் கருத்தறியப்பட்டு விட்டது. இந்த அமர்வுகளில் பெரும்பாலும் அரசியல் கட்சிகள், அரசியல் செயற் பாட்டாளர்கள், பொதுஅமைப்புக்கள், வெகுசில தனிநபர்கள்தான் இந்த அமர்வுகளில் கலந்து கொண்டனர்.

புதிய அரசியலமைப்பு திருத்தம் பற்றி மக்கள் அதிகமும் பேச வேண்டும், மக்கள் மத்தியில் பேசப்பட வேண்டும் என்று இந்த பகுதியில் தொடர்ந்தும் தீபம் வலியுறுத்தி வந்துள்ளது. மக்களின் பங்கேற்பில்லாத எந்த அரசியலமைப்பு திருத்தமும் நீடித்து நிலைக்காது. விரைவிலேயே இன்னொரு மாற்றத்தை கோருவதாக அமைந்துவிடும் என்பதையும் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

ஆனால் அப்படியான எந்த நிகழ்வும் வடக்கில் நிகழவில்லை. இந்தப்பகுதியில் உள்ள பெரும்பாலான மக்களிற்கு அப்படியொரு சங்கதி நிகழ்ந்ததே தெரிந்திருக்கவில்லை. தெரிந்த குறைந்த எண்ணிக்கையானவர்களும், 'அதெல்லாம் அரசியல்வாதிகளின் கடமை' என்றோ, 'நமக்கு எதற்கு அரசியல்' என்றோ நினைத்து தமது வேலைகளை பார்த்துக் கொண்டு இருந்து விட்டார்கள். கிழக்கில் இந்த அமர்வுகள் நடக்கும்போதும் இதே நிலைமைதான் இருக்கப் போகிறது.

நீண்ட போராட்ட வரலாற்றை கொண்டிருந்தபோதும், ஈழத்தமிழ் சமூகம் அதிகம் அரசியல்மயப்பட்டிருக்காததன் விளைவிது. தமிழ் சமூகத்தின் அதிகபட்ச அரசியல், தியாகி துரோகி வகைபிரிப்பிற்கு அப்பால் சென்றதில்லை. அதன் விளைவுகளைத்தான் இப்பொழுது கண்டு கொண்டிருக்கிறோம். அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான மக்களின் கருத்தறியும் அமர்வுகள் நடக்குமென்பது முன்னரே எல்லோரும் அறிந்ததுதான். அப்படியிருந்தும் மக்களை கருத்தறியும்குழுவின் முன்னால் அணிதிரட்ட எந்த அரசியல்கட்சியும், அமைப்பும் முன்வரவில்லை. அல்லது முடியாமல் போய்விட்டது.

அரசியலமைப்பு திருத்தத்திற்கு மக்கள் கருத்துச் சொல்ல ஒன்றுமில்லையென கட்சிகள் நினைத்தனவா?

கடந்த ஐந்து வருடத்தில் தமிழ் சிவில் சமூகமென ஒரு குழு பரபரப்பை கிளப்பிக் கொண்டிருக்கிறது. செயற்றிறனற்ற, புத்திஜீவிகளாக தம்மை அடையாளப்படுத்திய அந்த அமைப்பு, ஆரம்பத்தில் இது பற்றி அதிகம் கதைத்தது. இந்தகுழு தமிழ்மக்கள் பேரவையாக மருவியபோது, சொன்ன நியாயங்களிலொன்று அரசியலமைப்பு திருத்தம் பற்றிய உரையாடலை மக்கள் மத்தியில் நடத்த தமிழ்தேசிய கூட்டமைப்பு விரும்பவில்லை. அதற்கு மாறாக நாம் நிகழ்த்தப் போகிறோம் என.

ஆனால் அப்படியெதுவும் நிகழவில்லை. அரசியலமைப்பு திருத்தம் பற்றிய மக்கள் கருத்தறியும் அமர்வுகள் நடக்கும் விடயத்தை கூட அந்த அமைப்பால் பரவலடைய செய்யவில்லை. யோசனைகளை முன்வைக்க முடியவில்லை. அரசியலில் மக்களை பங்காளிகளாக்க முடியவில்லை.

தமிழ் சிவில் சமூகத்தி;கு ஒரு வரலாற்று கடமையிருந்திருப்பின் அது அவர்களால் செய்யப்படாமலேயே கடந்து சென்றுவிட்டது. அரசியலமைப்பு திருத்தத்தில் யாருடையதாவது பங்களிப்பு என்றால், அது அரசிலமைப்பு திருத்தத்தில் தமிழ்மக்களிற்கு தேவையானவற்றை உள்வாங்க வைப்பதுதான். மாறாக, எல்லாம் இறுதிசெய்யப்பட்ட பின்னர் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக சிலரை ஆர்ப்பாட்டம் செய்ய வைப்பதல்ல.

அரசியலமைப்பு திருத்தத்தில் மக்களை பங்காளிகளாக்குவது சிவில் சமூகத்தின் பணி மட்டுமல்ல. ஒவ்வொரு கட்சியின் கடமையும்தான். அதனை யாரும் செய்யவில்லை.

இந்த அமர்வுகள் கண்துடைப்பு, பலனற்றவை என யாராவது அவநம்பிக்கையூட்டலாம். எனினும், இப்படியான அமர்வுகளை புறந்தள்ளி எதுவுமே ஆகப்போவதில்லை. நல்ல அரசியல் செயற்பாடென்பது, கிடைக்கும் எல்லா வாய்ப்பிலும் பிரச்சனைகளை பேசிக் கொண்டிருப்பதே. சாதகமான களத்தில் மட்டுமே பேசுவேன் என்பது சுத்த அயோக்கியத்தனம்.

ஆகவே எல்லா களங்களிலும், எல்லா இடங்களிலும் நமது நியாயத்தை பேசிக் கொண்டேயிருப்போம்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**ஓஷடி ஹேமாமத்துவ - நடிகை**

பேசக்கூடிய எல்லா இடங்களிலும் பேசி விட்டோம். ஆனால் மாற்றம் வரவில்லை. இராணுவத்தினரையும், பௌத்த துறவிகளையும் பிடித்து சிறையில் அடைக்கும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக கடைசி வழியாக கடவுளிடம் முறையிடவுள்ளேன்.



**இரா.சம்பந்தன் - எதிர்க்கட்சி தலைவர்**

தமிழ்தேசிய கூட்டமைப்பு சில தேவைகளின் நிமித்தம் கடந்த காலத்தில் சில நடவடிக்கைகள் எடுத்தது. ஆனால் இனிவரும் காலத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பாகவே முடிவெடுக்கும். செயற்படும்.



**ரிசாட் பதியுதீன் - அமைச்சர்**

கடந்த கால நிகழ்வுகள் தமிழ் முஸ்லீம் மக்களிடையே சந்தேகத்தை தோற்றுவித்து விட்டது. இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து கொண்டிருந்தது போதும். தமிழர்களும் முஸ்லீம்களும் பகைத்து கொண்டு வாழவே முடியாது.



**செல்வம் அடைக்கலநாதன் - நா.குழுக்களின் பிரதி அவைத்தலைவர்**

வடமாகாணசபை நிதி திரும்பிப் போவதாக கூறப்படுவது பொய். அதில் உண்மையில்லை. வடமாகாணசபை பிழையான நெறிப்படுத்தலில் செல்வதாக யாரும் சொல்ல முடியாது.



**மனோகணேசன் - அமைச்சர்**

அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லையென ஒப்பாரி வைக்காதீர்கள். எதையும் படிப்படியாகத்தான் செய்ய முடியும். எடுத்த எடுப்பில் எதையும் செய்ய முடியாது.



**டக்ளஸ் தேவானந்தா - ஈ.ழமக்கள் ஜனநாயககட்சி**

அரசியல் திருத்தம் பற்றி புலம்பெயர்ந்தவர்களது கருத்துக்களை அறிய, அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்கள் மூலமும், காணொளி மூலமும் நடவடிக்கை எடுங்கள் என பிரதமரிடம் கேட்டேன். அவர் சம்மதித்துள்ளார்.

# க்ளிக் பக்கம்

தண்டவாளத்தில் பயணிக்கும் கால்கள்.
தள்ளாத வயதிலும் வாழ்வுடன் போராடும் உறுதி பிடித்திருந்தது. விடாத முயற்சிதானே வாழ்க்கை.

**என்னைப்பற்றி:** யாழ்ப்பாணத்தை சேர்ந்த நான் தற்பொழுது பணி நிமித்தம் கொழும்பிலிருக்கிறேன். கணினி வன்தொழில்நுட்பவியலாளர். புகைப்படங்கள் எடுப்பதிலும் ஆர்வம்.



படப்பிடிப்பாளர்:
ச.கோபிநாத்

இடம்:
வெள்ளவத்தை கடற்கரை



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk





## நம்மூர் நாயகர்கள்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தேடித்தேடி உதவிகள் செய்து வருகிறார் வலிகாமம் வடக்கின் முன்னாள் உதவித் தவிசாளர் சஜீவன். புலம்பெயர்ந்தவர்கள் மதத்தியிலுள்ள உதவும் உள்ளங்களிற்கும், பாதிக்கப்பட்டவர்களிற்கு மிடையிலான கருணைப்பாலமாக செயற்பட்டு, ஏராளம் உதவிகள் செய்து வருகிறார். ஜேர்மனியிலுள்ள உதவும் இதயங்கள் அமைப்பின் உதவியுடன் கிளிநொச்சியில் முன்னாள் போராளி குடும்பம் ஒன்றிற்கு கடந்த வாரமும் கிணறொன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.






Tweet

**Sanath Jayasuriya**
@sanath07

Totally disappointed abt the umpire decisions. I felt just like India playing with 13 players. And poor shot selections by SL too
#SLvIND

8:49 PM · 14 Feb 16

37 RETWEETS 47 LIKES

இந்தியாவில் நடந்த T20 தொடரை இலங்கை இழந்து விட்டது. முதலாவது போட்டியில் இந்தியாவை புரட்டியெடுத்த இலங்கை அடுத்த இரண்டு போட்டிகளிலும் தோல்வியை தழுவிவிட்டது. அதிலும் 3வது போட்டி தோல்வி, இலங்கை ரசிகர்களை கொதிப்படைய வைத்து விட்டது.

இலங்கை குறைந்த ஓட்டத்தில் ஆட்டமிழக்க, பின்னர் இலக்கை துரத்திய இந்தியா சாதாரணமாக ஊதித்தள்ளிவிட்டது. அன்று இலங்கை எடுத்த 82 ஓட்டங்கள்தான் T20 போட்டிகளில் இலங்கையின் குறைந்த ஸ்கோர். இந்தியா ஒன்பது விக்கெட்டால் வென்றது.

முதலாவது போட்டியில் இந்தியாவை புரட்டியெடுத்த இலங்கை, 3வது போட்டியில் தடம் புரண்டதால் ரசிகர்கள் கொதித்துப் போயுள்ளனர். ரசிகர்களின் கொதிப்பு இலங்கை வீரர்களின் மீது அல்ல. இந்திய நடுவர்கள் மீது. அன்றைய போட்டியின் நடுவர்கள் இருவரும் இந்தியர்கள். அவர்களின் தீர்ப்புக்கள் பலத்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளன. சர்வதேசப் போட்டிகளில் இந்த வகை நடுவர்கள் எப்படி தேர்வானார்கள் என்ற சர்ச்சையையும் தோற்றுவித்துள்ளது.

இந்திய அணி முறையிட்டாலோ, இலங்கை வீரருக்கு பக்கத்தால் பந்து சென்றாலோ கண்ணை மூடிக் கொண்டு கையை உயர்த்திவிடுவார்கள் என சமூக ஊடகங்களில் நகைச்சுவையாக பேசினார்கள். அன்றைய போட்டியில் இலங்கையின் முக்கிய மூன்று விக்கெட்டுக்கள் நடுவர்களின் தவறான தீர்ப்பால் காலியானது.

நடுவர்களின் பக்கச்சார்பான நடத்தையால் கோபமடைந்த இலங்கை ரசிகர்கள் இருவரையும் வறுத்தெடுத்து வருகிறார்கள். அதிலும் இந்தியா பதின்மூன்று வீரர்களுடன் விளையாடியது தவறு என ஒருவர் கொளுத்திப்போட, அது பற்றிக்கொண்டு ஓடியது.

இந்திய நடுவர்களை கலாய்த்து நிறைய மீம்ஸ்சும் உருவானது. இலங்கையின் முன்னாள் அதிரடிவீரர் சனத் கூட போட்டியை பார்த்து வெறுத்துப்போய், இந்தியர்களில் பதின்மூன்று வீரர்கள் விளையாடிய உணர்வு ஏற்பட்டதாக ருவிற்றரில் எழுதியிருந்தார்.

என்னப்பா இன்டியன்ஸ் அப்பயர்ஸ்ஞ் அப்படி பண்ணீட்டீங்களே!

Like Comment Share

**Rimaz Ahamed**
அன்பே
வீடு வந்து அப்பாவிடம் பெண் கேட்கச் சொல்கிறாய்...
கேட்டதும் கொடுத்துவிட அவரென்ன இந்தியன் அம்பயரா!!!

**Kishoker Dynamo**
இந்த மாதிரி ஆடினா நமக்கு நாச்சியப்பன் பாத்திரகடையில கூட கிண்ணம் தரமாட்டான் லயன்ஸ்.
எனிவே... சின்னப்பசங்க , கத்துக்க நிறைய இருக்கு , கத்துக்கப் போறோம் , வாழ்த்துக்கள்!
இந்திய அணியோட பட்டிங் லைன் அப் மேல எனக்கு பெரிய பொறாமை எப்பவும் இருக்கு.
திண்ட்ருவானுகள். மறுபடி அதை நிரூபிச்சிருக்காங்க. இந்தியன் பட்டிங் லைன் அப்புக்கு வாழ்த்துக்கள்.
அஷ்வின். இந்திய கிரவுண்டுகள்ல தான் தான் ராஜான்னு மறுக்கா நிருபிச்சிருக்கார் , வாழ்த்துக்கள்.
சீரிஸ் வின் பண்ணின இந்திய டீம் அன்ட் ரசிகர்களுக்கு பெரிய வாழ்த்துக்கள்.
அப்புறம்.... யா... அம்பயர்ஸ் ! நீங்களும் நல்லா விளையாண்டீங்க , வாழ்த்துக்கள்.

**Janakan Sivagnanam**
82 பெருசா 101 பெருசா...!!??
முதல் போட்டி பிட்ச் ல புல்லு கூட
இரண்டாவது போட்டி கிரவுண்டில புல்லு இல்ல
மூன்றாவது போட்டி கிரவுண்டில அம்பியரே இல்ல tongue emoticon
என்னமா இப்படி பண்ணுறியளே

## இணைய யன்னல்

Whatsapp:

அமெரிக்கர்: நாங்க ஒரு மெஷின் கண்டுபிடிச்சிருக்கோம்... அது முன்னாடி யாரும் பொய் பேச முடியாது.

தமிழர்: இது கண்டுபிடிப்பு இல்லை... நாங்க எல்லாம் அந்த மெஷினைத்தான் கல்யாணம் பண்ணியிருக்கோம்.



# வடமாகாணசபைக்கு வாஸ்து பிழையா?

வண்டுமுருகன்

பேய் புகுந்த வீடு என்பார்களேஞ் அதற்கு நல்ல உதாரணம் கைதடியில் உள்ள வடமாகாணசபைதான். உள்குத்து மோதல்களால் 'வெடவெடத்து' போயிருக்கிறது கைதடி இல்லம். வெளியில் 'ஜென்டில்மன்' அரசியல்பேசும்நமது அரசியல்வாதிகள் கைதடியிலுள்ள மாகாணசபை கட்டிடத்திற்குள் புகுந்ததும் போடும் 'பேய் வேடத்தை' பார்த்து நாடே கலகலத்து போயுள்ளது. மாகாணசபையின் அமைவிடம் சரியில்லை, வாஸ்து பிழையென்றெல்லாம் மாகாணசபை அரசஅலுவலர்கள் பகிரங்கமாக பேசிக் கொள்கிறார்கள் என்றால் பாருங்களேன்.

மாகாணசபைக்குள் ஏட்டிக்குப்போட்டியாக இரண்டுதரப்பு மல்லுக்கட்ட, பெரும் அக்கப்போரே நடக்கிறது வடக்கு மாகாணசபைக்குள். தமிழர்களின் இரசதானியென பெரும் பிரச்சாரத்துடன் பொறுப்பேற்ற வடக்கு மாகாணசபை இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளது. இதற்கு காரணம் மாகாணசபைக்குள் உள்ள 'குழப்படி லுடன் சூழ்ச்சிகரமாக கொண்டு வரப்பட்டதென்பது ஐங்கரநேசன் தரப்பின் கருத்து. ஏனெனில், மாகாணசபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பிரேரணைகள் பற்றிய விபரம் முதல்நாளாவது சம்பந்தப்பட்டவருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஐங்கரநேசன் விவகாரத்தில் அந்த சம்பிரதாயம் 'மிஸ்ஸிங்'.

முதல்வரிற்கு எதிரான தாக்குதலை செய்து அவரை பதவியிலிருந்து அகற்ற முயன்றவர்கள், அது முடியாமல் போனதும், முதல்வரின் வலது கையான ஐங்கரநேசனை குறி வைத்துள்ளனர் என்பது ஐங்கரநேசன் தரப்பின் கருத்து. ஆனால் குற்றம் சாட்டுபவர்கள் வேறுவிதமாக கூறுகிறார்கள். அடிக்கடி ஏதாவதொரு தினம் உருவாக்கி, அதற்கு பிரமாண்ட செலவு செய்வது ஏன்? அதற்கான நிதி எங்கிருந்து வருகிறது? அதன் கணக்கு வழக்கு என்ன? என்பதே அவர்கள் கேள்வி.

## வேண்டாத பெண்டாட்டி

'வேண்டாத பெண்டாட்டி கைபட்டாலும் குற்றம். கால்பட்

யொன்றில் 'பேக்கரி டீலிங்' பிரபலமானது. அதற்கு சற்றும் குறைவில்லாத சம்பவமொன்று நடந்துள்ளது. மாகாணசபையின் வன்னி உறுப்பினரொருவர் வர்த்தக நிலையமொன்று வைத்திருக்கிறார். அது மிக நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

என்ன செய்யலாமென தெரியாமல் 'மக்கள் பிரதிநிதி' திண்டாடிக் கொண்டிருக்க கடந்த ஜனாதிபதி தேர்தல் வந்தது. நஷ்டபட்ட உறுப்பினர், இன்னொரு உறுப்பினரையும் அழைத்துக் கொண்டு மகிந்த தரப்பிடம் சென்றிருக்கிறார். மூன்று கோடி பணம் தந்தால் கட்சிதாவி உங்களை ஆதரிக்கிறேன் என 'டீல்' பேசியருக்கிறார்.

வந்த இரண்டு ரிக்கெற்றும் மூன்று கோடி பெறாதவை என்பதை தெரிந்து கொண்டு அவர்களை விரட்டாத குறையாக மகிந்த தரப்பு விரட்டியுள்ளது. அத்துடன் வந்தவர் சார்ந்த கட்சியின் தலைவரை தொலைபேசியில் அழைத்து, அவர்களின் பேரத்தையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

பின்னர் கட்சி அவருடனான நெருக்கத்தை குறைத்து கொண்டுள்ளது.

ஏற்படுத்தும் என்கிறார்கள்.

## காதில்பூ கந்தசாமிகள்

முதலமைச்சர், ஐங்கரநேசன் தரப்பிற்கு எதிராக ஒரு தரப்பு போர்க்கொடி தூக்க, மறுதரப்பு அதற்கெதிராக மல்லுக்கட்ட, மாகாணசபை கூட்டத் தொடர் என்றாலே 'எண்டர்ரெயின்மென்ற்' நிகழ்ச்சியென மாறிவிட்டது.

முதலமைச்சர் பேரவைக்கூட்டத்திற்கு போகக்கூடாதென ஒரு இரகசிய கையெழுத்து முயற்சி, அதில் போலி கையெழுத்து, நாம் கையெழுத்திடவில்லையென உறுப்பினர்களின் அறிக்கை, ஐங்கரநேசனிற்கு எதிரான பிரேரணை, பின்னர் பிரேரணைக்கு ஆதரவளித்ததிலிருந்து விலகல், அந்த பிரேரணைக்கு எதிராக கையெழுத்து வேட்டையென மாகாணசபையே கையெ








சி.வி.கே.சிவஞானம்



ஐங்கரநேசன்

பையன்கள்' சிலர்தான் காரணம் என்கிறார்கள்.

இனப்படுகொலைக்கு நீதி வேண்டும், போர்க்குற்ற விசாரணை நடத்து என இந்தியாவிலும், புலம்பெயர்ந்துமுள்ள மக்கள் கையெழுத்து போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்க, வடக்கு மாகாணசபைக்குள் 'காலைவாரும்' விவகாரங்களிற்காக இரகசியெழுத்து வாங்கும் அசிங்கங்கள் எல்லாம் நடக்கின்றன. இப்பொழுது மாகாணசபை உறுப்பினர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து நின்று ஏட்டிக்குப்போட்டியாக கையெழுத்து வேட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

## தெறிக்கும் அரசியல்வாதிகள்

ஆரம்பத்தில் முதல்வர் விக்னேஸ்வரனிற்கு எதிராக ஒரு அணி போர்க்கொடி தூக்கியது. சயந்தன், ஆர்னோல்ட், அஸ்மின், சுகிர்தன் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். பின்னர் அது சற்று தணிந்தது. சில வாரங்கள்தான். அதன் பின்னர் வேறு வடிவம் எடுத்து, அமைச்சர் ஐங்கரநேசன் மீது சில உறுப்பினர்கள் வரிசையாக குற்றப்பட்டியல் வாசித்தனர். அவர்களின் பிரதான குற்றச்சாட்டு 'எங்களிற்கு ஒன்றும் சொல்லாமல் செய்கிறார்' என்பது. அடுத்தது, 'பெருமெடுப்பில் நிகழ்ச்சிகள் செய்து பணத்தை விரயம் செய்கிறார்', 'யாழ்ப்பாணத்தில் மட்டுமா பார்த்தீனியம்' என்பவை.

தன்மீதான பிரேரணை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் இரகசிய ஒப்புதடாலும் குற்றம்' என்றொரு பழமொழிக்கு எம் மீதான குற்றம்சாட்டுபவர்கள்தான் நல்ல உதாரணம்' என்று விவசாய அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன. விவசாய அமைச்சில் ஊழல் நடப்பதாக பரப்பப்படுவதெல்லாம் சுத்த கட்டுக்கதை. வடக்கு அமைச்சுக்கள் நான்கிலும் அதிக வினைத்திறனுடன் இயங்குவது விவசாய அமைச்சுத்தான் என்கிறார்கள்.

அவர்கள் சொல்வதில் ஓரளவு உண்மையுள்ளதைப் போலத்தான் தெரிகிறது. விவசாய அமைச்சின் விழாக்களில் பணம்முறையாக கையாளப்படவில்லையென சுமத்தப்படும் குற்றச்சாட்டில் முழுமையான உண்மையில்லை என்பது விவசாய அமைச்சு அதிகாரிகளின் தகவல். அனைத்து நிதியும் முறைப்படி அமைச்சினூடாக செலவிடப்பட்டது, அனைத்து கணக்கு வழக்கும் உள்ளதென்கிறார்கள்.

கவிஞர் வைரமுத்துவை அழைத்து வந்ததில் விவசாய அமைச்சு செலவிட்டது வெறும் பதின்மூவாயிரம் ரூபாய் என்பது அவர்கள் தகவல்.

விவசாய அமைச்சர் மீதான குற்றச்சாட்டில் பகிரங்கத்திற்கு வராத கதைகள் பல உள்ளதென்பது ஐங்கரநேசனின் ஆதரவாளர்களின் கருத்து. அவர்கள் சொல்லும் அதிர்ச்சிகதைகள் பலவற்றில் சில இவை.

## 'பேக்கரி டீலிங்'

வடிவேலுவின் நகைச்சுவை காட்சி

அதன் பின்னர் இன்னொரு வழியை அந்த உறுப்பினர் முயன்றுள்ளார்.

ஐங்கரநேசன் தனது அமைச்சின் ஊடாக தனது வர்த்தக நிலையத்தை நல்ல விலையில் வாங்கிக் கொள்ள வேண்டுமென விண்ணப்பம் செய்திருக்கிறார். அதனை ஐங்கரநேசன் மறுத்துள்ளார்.

இதன் பின்னர்தான் குற்றச்சாட்டு தீவிரமடைந்தது என்றும் கூறப்படுகிறது.

## மல்லிகையில் மயங்கிய மன்னர்கள்

அன்றைய மாகாணசபை பிரளயத்தில் வைக்கப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டு வவுனியா மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதென்பதே. வவுனியாவில் குளங்கள் புனரமைக்கப்படவில்லை. மல்லிகை உற்பத்திக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மூங்கில் செய்கைக்கு பணம் வழங்கப்படவில்லை என அடுக்கடுக்காக குற்றப்பட்டியல் வாசித்தனர்.

மூங்கில் செய்கைக்கு அனுமதி வழங்குவது ஆபத்தானதென்பதே சூழலியலாளர்களின் கருத்து. அதுதவிர, பெருமுதலாளிகளின் அந்த மூங்கில் செய்கை மத்திய அரசின் ஆசிர்வாதத்துடன் வவுனியாவில் தாராளமாக நடக்கிறது. பெருமெடுப்பில் செய்யப்படும் இந்த வர்த்தக பயிர்ச்செய்கை விவசாய சமனிலையை பாதிக்கும் என்ற கருத்தும் உள்ளது.

விவசாய நிலங்களில் பணப்பயிர்களை அதிகளவில் அறிமுகப்படுத்துவது, விவசாய உற்பத்தியில் சடுதியான வீழ்ச்சியை

ழுத்து வேட்டை போர்க்களமாகியுள்ளது.

ஆளாளுக்கு முஷ்டியை முறுக்கிக்கொண்டு களத்தில் இறங்கி, இன்னொரு மக்கள் பிரதிநிதியின் முகத்தில் குத்துவதிலேயே குறியாக உள்ளனர். அவர்களின் கணக்கில், மக்கள் எல்லோரும் காதில் பூ கந்தசாமிகளே!

அமைச்சர் ஐங்கரநேசனிற்கு எதிராக பரபரப்பு குற்றம் சுமத்திய வவுனியா உறுப்பினர் தியாகராசா திடீர் பல்டியடித்து, குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறுவதாக கடிதம் அனுப்பியுள்ளார்.

ஐங்கரநேசனிற்கு எதிரான 'திடீர்' பிரேரணைக்கு எதிராகவும் ஒரு கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தமிழரசுக்கட்சி தவிர்ந்த மற்றைய கட்சிகளின் அங்கத்தவர்கள் இதில் கையெழுத்திட்டுள்ளதாக அறிய முடிகிறது.

வடக்கில் காணிகள் விடுவிக்கப்படாமை, காணாமல் போனவர்கள் விவகாரம், அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமை போன்ற விடயங்கள் மக்களின் தலையாய பிரச்சனைகளாக இருக்கும்போது, கைதடியின் மூடிய மாகாணசபைக்குள் சில்லறை சண்டையில் ஈடுபடுபவர்கள் மீதான மக்களின் அதிருப்தி என்றுமில்லாத அளவில் அதிகரித்துள்ளது.

1-ம் பக்க தொடர்ச்சி



என்பது யோசிதவின் செல்லப்பெயர். மகிந்த அணிக்கு கடிவாளமிடும் நடவடிக்கைக்கு, மகிந்தவின் வாரிசொன்றின் பெயரையே வைத்துள்ளார்கள்.

யோசிதவை உள்ளே வைத்திருப்பதோ, வெளியில் எடுப்பதோ யுத்தத்தின் முடிவல்ல. சிறுசிறு உரசலாக கடந்த ஒருவருடம் நீடித்த மோதல் இந்த கைதுடன் சூடான கட்டத்தை எட்டியுள்ளது. இது இன்னும் நீண்ட நாளுக்கு நீடிக்கப் போகிறது. இது மறைமுக யுத்தம் என்றாலும், இதில் வெற்றிபெறுபவர்கள்தான் இலங்கையை ஆளப்போகிறார்கள். குறைந்த பட்சம் அடுத்த உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெறப் போகிறார்கள்.

மகிந்த குடும்பம் மலைவிழுங்கி ஊழல் பேர் வழிகள் என புதிய அரசு ஒரு பக்கம் பிரசாரம் செய்ய, போரை வென்ற இப்படி அவமானப்படுத்துகிறார்களே என மகிந்த அணி ‘தேம்பித்தேம்பி அழுது’ அனுதாபம் தேடுகிறது.

மக்களை சென்ரிமென்ராக கவிழ்ப்பதில் மகிந்த கில்லாடியென்பதை அரசும் அறிந்து தான் வைத்திருந்திருக்கிறது. யோசித கைது செய்யப்பட்டதை அடித்தளமாக வைத்து மளமளவென அனுதாபத்தை கட்டி யெழுப்பிவிடுவார் என்பதை எல்லோரும் அறிந்துதான் வைத்திருந்திருக்கிறார்கள்.

இதனால்தான் யோசித கைது செய்யப் படுவதற்கு முன்னர் அரச பிரதானிகள் பல சுற்று மந்திராலோசனையில் ஈடுபட்டுள்ளனர். கிடைக்கின்ற தகவல்களின்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடுஇரவுகளில் தொலை பேசியில் கூட ஜனாதிபதியுடன் மந்திரா லோசனை நடத்தியிருக்கிறார். அப்படியொரு உரையாடலில், யோசிதவிற்கு சிறைக்குள் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கலாமென்றும் பிரதமர் கூறியிருக்கிறார். என்றாலும் மைத்திரி அதனை மறுத்து விட்டார்.

யோசிதவை கைது செய்வதென தீர்மானித்த பின்னர், ‘பக்காவாக’ அதனை எப்படி செய்வதென திட்டமும் தீட்டப்பட் டுள்ளது. எந்த நேரம் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைப்பது, எப்படி விசாரிப்பது, எந்த நேரம் கைது செய்வது, எப்படி நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது, என்ன நேரம் கொண்டு செல்வது என்பதெல்லாம் ஒரு வாரத்தின் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டதென்கிறார்கள். அதிகாரிகள் குழு வொன்று அனைத்தையும் பக்காவாக திட்ட மிட்டுள்ளது.

மகிந்த குடும்பத்தில் ஒருவர் கைது செய்யப் படலாமென அவ்வளவு சுவாரஸ்யமில்லாமல் செய்திகள் வந்து கொண்டிருக்க, யாருமே எதிர்பார்க்காத சமயத்தில் யோசிவை அள்ளிச் சென்றுள்ளனர். யோசித கைது விவகாரத்தில்



தான் தோற்றுப் போனேன் என மகிந்த ராஜபக்ச தனக்கு நெருக்கமானவர்களிடம் அரற்றியதாக ஒரு தகவல் உள்ளது. முன்னரே தெரிந்திருந்தால், தற்போது பசில் உயர்நீதி மன்றத்தை நாடியதை போல ஏதாவது சட்டப் பாதுகாப்பை அவர்கள் நாடியிருக்க கூடும். அதாவது மகிந்த ராஜபக்ச எதிர்பார்க்காத சமயத்தில் அவரது உச்சந்தலையில் அடி விழுந்துள்ளது.

தோல்வியின் பின்னர் மகிந்த அணியை உச்சந்தலையில் அடித்து கதையை முடிக்கத் தான் மைத்திரி விரும்பியிருந்தார். என்றாலும், ரணில் விக்கிரமசிங்கதான் கடுமையாக முயன்று அதை தடுத்துள்ளார். இரண்டு மாதங் களின் முன்னர்கூட மைத்திரி, சந்திரிகா, ராஜித, அர்ஜுன, சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட வர்கள் நடத்திய உயர்மட்ட கலந்துரை யாடலில் மகிந்தவிற்கு எதிராக எந்த கடுமை யான நடவடிக்கையும் எடுக்க கூடாதென ரணில் விக்கிரமசிங்க கடுமையாக வாதாடியிருக்கிறார். தனக்கு அச்சுறுத் தலில்லாத அளவில் மகிந்தவை உயிர்ப்புடன் வைத்திருந்து சுதந்திரக்கட்சிக்கு ஆப்பு வைக்கும் வேலையை ரணில் கச்சிதமாக செய்கிறார் என்பது மைத்திரிக்கு புரிந்திருந் தாலும், ஒன்றுமே செய்ய முடியாமலி ருந்திருக்கிறார். ஆவணங்கள் காணாமல் போனது, ஆவணங்கள் நகர்த்தப்படுவதில் தாமதம் என வரும் செய்திகளின் பின்னால் ‘சம்திங்’ உள்ளதாம்.

இப்படியே போனால் ‘ஒப்ரேசன் சக்சஸ். ஆள் குளோஸ்’ கதையாகுமென்பதை நன்றாக உணர்ந்த மைத்திரி அணி ஆரம்பித்துள்ளதே ‘ஒப்ரேசன் YOO’!. இதில் ரணில் விக்கிரமசிங்க பார்வையாளர் என்பதுதான் உள்வீட்டு தகவல். இதை வைத்துத்தான் சொல்கிறார்கள், இம்முறை ஏதோ ஒரு முடிவுவரும் என.

வாழ்வா சாவா மோதல் என்பது நன்றாக தெரிந்தபின்னர்தான் மகிந்தகுடும்பம்களத்தில் முழுமையாக இறங்கியுள்ளது. சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை உடைத்தெடுக்கும் நடவடிக்கையில் பசில் வெளிப்படையாக ஈடுபடுவது, கோத்தபாய பகிரங்கமாக புதுக்கட்சி பற்றி பேசுவது, மகிந்த புதிய அலுவலகம் திறந்தது, சு.கவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை ஒன்று கூட்டியதென எல்லாம் இறுதி யுத்த முஸ்தீபுகள்தான்!

தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில கூட்டணிதான் மகிந்த அணியின் சேனாதிபதிகள் என்பதை போல வெளியில் காட்டப்பட்டாலும் அவர்கள் எல்லாம் வெறும் ‘டம்மி’ என்பதே உள்வீட்டு தகவல். பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, டலஸ் அழகப்பெரும, குமார வெல்கமதான் ‘சைலண்ட் கில்லர்’கள். கம்மன்பில கூட்டணி செய்தியாளர் சந்திப்புக்களில் பேசுவதெல்லாம், பின்னர் சொன்ன நால்வர் கூட்டணியின் ‘மைண்ட் வொய்ஸ்’தான்.

அதிலும் பசில்தான் எல்லாம். தற்போதைய நிலையில் பசில் ராஜபக்சவை ‘உள்ளுக்குள் போட்டால்’ மகிந்த அணி செயலிழக்குமென்பதை மைத்திரி நன்றாகவே உணர்ந்துவிட்டார். கைதிற்கான ‘கவுண்டவுன்’ ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டதென்பதை யெல்லாம் ஊருக்குள் தண்டோரா போட்டு சொல்லத் தேவையில்லை, பசில் உயர்நீதிமன்றத்திற்கு ஓடியதே சொல்லும்!

அடுத்தடுத்த கைதுகளால் ராஜபக்ச குடும்பத்தை திணறடிக்க திட்டம் ரெடி போலுள்ளது. முதல் பசிலா, நாமலா என்பதுதான் தெரியவில்லை.

எந்த சனிக்கிழமை என தெரியவில்லை, ஏதோ ஒரு சனிக்கிழமைக்கு மக்கள் மட்டுமல்ல ராஜபக்சக்களும் ‘வெயிற்றிங்’.

நாடியா
nadiyanice@yahoo.com

**யோ**சித கைதானதும் ஒரு தொழில் அதிபரின் மூலம் மைத்திரிக்கு தூது விட்டுள்ளார் மகிந்த. தனது குடும்பத்தின் மீதான ‘ஒப்ரேசனை’ நிறுத்தினால், சுதந்திரக்கட்சிக்கு எதிரான ‘ஒப்ரேசனை’ நிறுத்திக் கொள்ள தயாராக உள்ளதாக. உடனடியாக பதில் சொல்லாத மைத்திரி, சந்திரிகாவுடன் இது பற்றி பேசியுள்ளார். மகிந்தவின் சமரசத்தை அடியோடு நிராகரித்த சந்திரிகா, ‘இது கடைசி ஒப்ரேசன். மகிந்தவை முழுதாக முடக்கி விட்டு, ஆறுதலாக பேசுவோம்’ என வெட்டு ஒன்று துண்டு இரண்டாக சொல்லி விட்டாராம்.

**ம**கிந்த ராஜபக்ச அணி இனவாத அணி, தென்னிலங்கையில் ஆதரவு உண்டே தவிர சிறுபான்மை இனங்கள் மத்தியில் ஆதரவில்லை என்ற பரவலான அபிப்பிராயத்தை உடைக்க மகிந்த அணி பகீரத பிரயத்தனம்படுகிறது. அண்மையில் மகிந்த அணி நடத்திய தேங்காயடிப்பு பிரபலமானதும், அதைப் போன்ற ஆலய நிகழ்வுகளை வடக்கிலும், கிழக்கிலும் நடத்த முயன்றுள்ளனர். கிழக்கு முஸ்லீம்கள் மத்தியில் காத்தான்குடியிலும், வடக்கு தமிழர்கள் மத்தியில் நல்லூரிலும் பிரமாண்ட சமய அனுட்டானம் நடத்த முயற்சிக்கின்றனர். இதற்காக இரண்டு இடங்களிலுமுள்ள மகிந்தவின் ‘முன்னாள் விசுவாசி’களை அணுகியுள்ளனர். தேர்தலில் மகிந்த தோற்றதும் கால்டன் இல்லத்திற்கு வீடு தேடி சென்ற ஆட்கள்தானே, நமது பக்கம் வருவார்கள் என கணக்குப் பண்ணியுள்ளனர். இரண்டு விசுவாசிகளும் எமகாதகர்கள். சொல்லி வைத்ததைபோல ‘ஹலோ..ஹலோஞ் சிக்னல் சரியில்லை... இரண்டு மாதத்தின் பின்னர் பேசுவமே’ என தொலைபேசியை வைத்து விட்டனராம்.

மக்களை சென்ரிமென்ராக கவிழ்ப்பதில் மகிந்த கில்லாடியென்பதை அரசும் அறிந்துதான் வைத்திருந்திருக்கிறது. யோசித கைது செய்யப்பட்டதை அடித்தளமாக வைத்து மளமளவென அனுதாபத்தை கட்டி யெழுப்பிவிடுவார் என்பதை எல்லோரும் அறிந்துதான்



**இ**தேபோலத்தான் தற்போதும் அதிகாரிகள் மட்டத்தில் பரபரப்பாக திட்டங்கள் விவாதிக்கப்பட்டு வருகிறது என்கிறார்கள். விரைவில் ராஜபக்ச குடும்பத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு மேலதிக சாப்பாட்டு பார்சல்கள் வெலிக்கடைக்கு செல்ல வேண்டி வரும் என்கின்றது அரச உயர்மட்ட தகவல்கள். தன்னை கைது செய்யும் ஆபத்துள்ளதாக பசில் ராஜபக்ச உயர்நீதிமன்றத்தை நாடியிருப்பதும், நாமல் அடுத்த வாரம் கைதாகும் அபாயமுள்ளதாக மகிந்த பகிரங்கமாக கூறியதும் குறிப்பிடத்தக்கது. கைதுப்பயத்தில் ராஜபக்ச குடும்பம் வெலவெலத்துப் போயிருப்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையின் முக்கியஸ்தர் பகுதி தூசு தட்டப்பட்டு, புனரமைக்கப்படுகிறது!

## 1-ம் பக்க தொடர்ச்சி

துஷ்பிரயோகத்தின் பின்னர் கொல்லப்பட்ட பதின்னான்கே வயதான வவுனியா பாடசாலை மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவியின் மரணம், பெண்கள் எதிர்கொள்ளும் ஆபத்தான வாழ்க்கையை வெளிச்சமிட்டுள்ளது.

வவுனியாவை கொந்தளிக்க வைத்துள்ள மரணத்தின் பின்னணி என்ன? குற்றவாளிகள் யார்? இப்படி ஏராளம் கேள்விக்குறிகள் நீடித்துக் கொண்டிருக்கிறது.

கொலையா தற்கொலையா என இரண்டு நாட்களாக குழப்பம் நீடித்த நிலையில், இறுதியில் ஹரிஸ்ணவியின் மரணம் தற்கொலையல்ல, கொலையென்பது பிரேதப் பரிசோதனையில் நிரூபணமாகியுள்ளது. துஷ்பிரயோகத்தின் பின்னர் கொல்லப்பட்டு, தூக்கில் தொங்க விடப்பட்டுள்ளார்.

இந்த கட்டுரையை எழுதும் வரை குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை. சில முகங்கள் சந்தேக வளையமிடப் பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ள போதும், யாரென்பது விசாரணைகள் முடியும் வரை வெளிப்படப் போவதில்லை. சிறுமி சேயாவின் மரணத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்டதை போன்ற நெருக்கடிகளை ஏற்படுத்தும் உணர்ச்சிபூர்வ தருணங்கள் ஏற்படலாமென்றும் ஊகிக்கப்படுகிறது.







**ஹ**ரிஸ்ணவியின் தாயார் பாடசாலை ஆசிரியர். தந்தை ஐரோப்பிய நாடொன்றில் வாழ்கிறார். இரண்டு சகோதரர்கள். சம்பவ தினத்தன்று காலையில் தாயாருடன் ஹரிஸ்ணவி வாக்குவாதப்பட்டுள்ளார். அன்று பாடசாலை செல்லாமல் வீட்டிலேயே இருந்து விட்டார். வழக்கமாக பிள்ளைகள் யாராவது பாடசாலை செல்லாமல் வீட்டில் நிற்கும் சமயத்திலும், வெளி கேற்றை தாயார் பூட்டிச் செல்வது வழக்கம். சம்பவதினத்திலன்றும் அப்படித்தான் சென்றிருக்கிறார். மதியம் வீடு திரும்பி கதவைத் திறந்து உள்ளே சென்றபோது அறைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் ஹரிஸ்ணவியின் உடல் காணப்பட்டுள்ளது.

**வி**த்தியாக்களின் கதை இன்னமும் முடியவில்லை. அது தொடர்கதையாகவே இருக்கப் போகிறதா? வவுனியா மாணவி ஹரிஸ்ணவியின் மரணம் எழுப்பும் கேள்வி இதுதான். மனிதகுலமே வெட்கித் தலைகுனியும் இந்த கொடூரத்திற்கு இலங்கை சட்டங்கள் முடிவுகட்டவே மாட்டாதா? வித்தியாக்களாகவும், சேயாக்களாகவும், ஹரிஸ்ணவிக்களாகவும் பெண்கள் அவலச்சாவு சாவதுதான் நாகரிக உலகத்திலும் முடிவாகப் போகிறதா?

கடந்த 16ம் திகதி மாணவியின் கொலை நடந்துள்ளது. மதியம் பாடசாலை முடிந்து வீடு திரும்பிய தாயார் அறைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் ஹரிஸ்ணவியின் உடலை கண்டுள்ளார். அறைக்குள் இருந்த பொருட்கள் யாவும் சிதறியிருந்தன. உடைப்பைகள் சிதறியிருந்தன. மகளின் கோலத்தை பார்த்து பதறிய தாயார் உடனடியாக அவரை தூக்கிலிருந்து இறக்கியதாக கூறப்படுகிறது.

அந்தவீட்டிற்கு முதலில் சென்ற உள்ளூர் இணையத்தளமொன்றின் செய்தியாளர் தாயாருடன் பேசியுள்ளார். காலையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே மகளின் தற்கொலைக்கு காரணமென நம்பிய தாயார் அதனை கூறிவிட்டார். அடுத்த சிறிது நேரத்தில் எல்லா ஊடகங்களிலும் 'வீட்டில் தகராறு: தூக்கில் தொங்கிய மாணவி' என்ற செய்தி வெளியானது.

வீட்டிலிருந்த தொலைபேசி, ஹரிஸ்ணவியின் மோதிரம் என்பன காணாமல் போயிருந்தன. இதுதான் சந்தேகத்தை அதிகப்படுத்தியுள்ளது. அத்துடன் மரணமான பின்னர் ஹரிஸ்ணவி அணிந்திருந்த டெனிம் காற்சட்டையும் சந்தேகத்தை கிளப்பியிருந்தது.

ஹரிஸ்ணவி தற்கொலை செய்து கொள்ளவில்லை, அது கொலையென்பதில் உறவினர்கள் ஆரம்பத்திலிருந்தே உறுதியாக இருந்தனர். வெளிநாட்டிலுள்ள நெருங்கிய உறவினர் ஒருவர் மரணச்செய்தி வெளியானதுமே, அது கொலைதான் என சில சந்தேகத்திற்கிடமான விடயங்களை சொல்லி தனது பேஸ்புக்கில் எழுதியிருந்தார்.

மரணவிசாரணை அதிகாரி சிவநாதன் கிசோரும் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார். அது ஒரு கொலைச் சம்பவம் என்பதற்கான தடயங்கள் தென்பட்டதையடுத்து, பிரேதப்பரிசோதனைக்காக வவுனியா பொதுவைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வவுனியா வைத்தியசாலையின் நிபுணத்துவ சட்ட வைத்திய அதிகாரி கடமை அலுவலாக கொழும்பு சென்றிருந்ததால் பிரேதப்பரிசோதனையில் சிறிய தாமதம் ஏற்பட்டது. இந்த தாமதம் நிறைய கதைகளை உருவாக்க, உலாவ வைத்தது.

18ம் திகதி நடந்த பிரேதப்பரிசோதனையில் அது ஒரு கொலையென்பது வெளிப்பட்டது. சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பின்னர் கழுத்தை நெரித்து கொல்லப்பட்டுள்ளார். காமுகனிடமிருந்து தப்பிக்க சிறுமி கடுமையாக போராடியிருந்ததாக பிரேதப்பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கொல்லப்பட்ட பின்னரே சடலம் தூக்கில் தொங்க விடப்பட்டிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

இது கொலையென்று உறுதியான பின்னர் பொலிசார் கொலையாளியை தேடி வலைவிரித்துள்ளனர். வவுனியா பெருங்குற்றத் தடுப்பு பிரிவு பொலிசார் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

மோதிரம், கைத்தொலைபேசி என்பன காணாமல் போயிருக்கும் நிலையில், கைத்தொலைபேசி இந்த விவகாரத்தில் முக்கிய துரும்புச்சீட்டாக இருக்கும் என நம்பப்படுகிறது.

**நான்ஸி**






# கடல் எங்கள் காலளவு

## கடலில் இறங்கும் பெண்களின் கதை



செல்வம்
selvam@deepam.lk

கடலுக்கு சென்ற ஆண்களிற்காக கரையோரம் காத்திருக்கும் பெண்களை பார்த்திருப்பீர்கள். காத்திருப்தெல்லாம் அந்தக்காலம் என பெண்கள் கடலிற்குள் இறங்கும் ஒரு கிராமத்தின் கதையிது.

ஆண்கள் தொழிலுக்கு செல்வார்கள். பெண்களும் தொழிலுக்கு செல்வார்கள். கடல் ஆண்களிற்கு மட்டுமல்ல, பெண்களிற்கும் அள்ளிக் கொடுக்கிறது.

இது யாழ்ப்பாணத்தின் காரைநகரில் உள்ள ஊரியம்பதி கிராமத்தின் கதையிது. ஆண்களைப் போலவே இங்குள்ள பெண்களும் கடலுக்கு தொழிலுக்கு செல்கிறார்கள். நவீன மீன்பிடி உபகரணங்கள் எதுவுமில்லாமல், சிறிய கட்டுமரம், கொஞ்சம் வலைகள், ஒரு துடுப்பு கம்பு. இவ்வளவுதான் அவர்களின் உபகரணம். பெண்கள் தனித்தோ, சிறிய குழுக்களாகவோ கடலில் இறங்கும் காட்சிகள் இங்கு அன்றாட காட்சிகள்.

ஊரியம்பதி கிராமத்துடன் ஒட்டியுள்ள பரவைக்கடலே 'சமத்துவ கடலாக' உள்ளது.

இந்த கிராம மக்கள் பெரும்பாலும் கடல்தொழிலை நம்பி வாழும் அன்றாடம் உழைத்து வாழ்பவர்கள். பரவைக்கடல் கிராமத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. வள்ளத்திலும், நடந்து சென்றும் மீன்பிடியில் பெண்கள் ஈடுபடுகிறார்கள். வலைவீசுபவர்கள் வலை வீசுகிறார்கள். அல்லது சிறிய கூடை போன்ற நீருள் துலாவி அதற்குள் அகப்படும் மீனை பிடிக்கிறார்கள்.

ஆரம்பத்தில் கணவனை இழந்தவர்கள், கணவன் உடம்பிற்கு முடியாமல் இருந்தவர்கள் துணிந்து கடலிற்கு இறங்க இப்பொழுது முழு கிராமப் பெண்களுமே கடலிற்குள் இறங்க தொடங்கிவிட்டார்கள். வள்ளம் உள்ளவர்கள் வள்ளத்தில் கடலுக்குச் செல்கிறார்கள். வள்ளமில்லாதவர்கள் நடந்தே கடலிற்குள் இறங்குகிறார்கள். கழுத்தளவு தண்ணீர்வரை சென்று வலைபோட்டு மீன்பிடிக்கிறார்கள். கடலுக்குள் இறங்கும்பேது பட்டி, கூடு, கான் போன்றவற்றை ஒவ்வொரு பெண்ணும் உடலுடன் கட்டிக் கொள்கிறார்கள்.

அதிகாலை 5 மணிக்கெல்லாம் பெண்கள் கடலில் இறங்கத் தொடங்குகிறார்கள். ஏழு மணிக்குப் பின்னர் கரையேறத் தொடங்கு கிறார்கள். அந்த சமயத்தில் வியாபாரிகள் கரையோரத்தை முற்றுகையிடுகிறார்கள். பெண்களிற்கும் வியாபாரிகளிற்குமிடையில் பேரம் ஆரம்பிக்கிறது. எட்டு மணிக்கெல்லாம் கடற்கரை வெறிச்சோடி விடுகிறது.

மீண்டும் மாலை 3 மணிக்கு கடலிற்கு இறங்கத் தொடங்குகிறார்கள். இரவு 9 மணியளவில் அடங்குகிறது.

கடலில் இறங்கும் பெண்கள் தினசரி இருநூறு ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரை சம்பாதிக்கிறார்கள்.

வாழ்வை நகர்த்த கடலில் இறங்கும் பெண்கள் படும் சிரமங்கள் கொஞ்ச நஞ் சமல்ல. முழங்கால் வரை புதையும் சேறும், இராணுவ வேலிக்கு பயன்படுத்தப்பட்ட முள்ளுக்கம்பியும்தான் அதிக சவால். அதுதவிர, கடலில் வளரும் கவாட்டி, கொடித் தாளை போன்றன காலை பதம் பார்க்க காத்திருக்கின்றன.

இந்தகடலில் வித்தியாசமான சவாலொன் றும் உள்ளது. இங்குள்ள சுணை பிற கடல்களில் உள்ளதைவிட வித்தியாசமானதாகவும், அதிக பாதிப்பு தருவதாகவும் உள்ளதாக மீனவர்கள் கூறுகிறார்கள். அந்தப் பகுதி கண்ணுக்கு தெரியாமல் நீரில் மிதந்துவரும் இந்த பதார்த்தம் உடலில் படும்போது முதலில் மின்சாரம் தாக்கியதைப் போன்ற அதிர்ச்சியும் வலியும் ஏற்படுகிறது. பின்னர் பட்ட இடம் வீக்கமடைகிறது. ஒருமுறை இந்த தாக்குதலிற்கு உள்ளானவர்கள் ஆயுள்முழுவதும் கடலுக்குள் இறங்கும்போது அரிப்பு ஏற்படுகிறது. இதனால் கடல்என்றாலே மீனவர்களிடம் ஒருவித அச்சமிருப்ப தையும் உணர முடிகிறது. அந்த சுணை பற்றிய முறையான ஆய்வுகள் நடந்ததாகவும் தெரியவில்லை.





இந்த கிராமத்தின் மீது அதிகாரிகளின் பார்வை படவில்லையென குற்றம்சாட்டுகிறார்கள். கிராமத்திலுள்ள பலர் குடிசைவீடுகளில்தான் வசிக்கிறார்கள். வீட்டுத்திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தபடவில்லையென்ற முறைப் பாட்டுடன் இருக்கிறார்கள். தமது மீன்பிடி உபகரணங் களை பாதுகாத்து வைக்கவே அவர்களிடம் முறையான இடங்களில்லை.

### த.ரஜீவன்

தலைவர், ஊரியம்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்

இந்த பரவைக்கடலில் மீன்பிடிக்கும் பெண்கள் படும் சிரமங்கள் சாதாரணமானவையல்ல. வலையில்லை, வள்ளமில்லை, அதை வைக்க இடமில்லை, வீடில்லை. ஆனால் இதுவரை கிராமத்திற்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. அதிகமானவர்கள் கடலுக்குள் நடந்து சென்றுதான் மீன்பிடிக்கிறார்கள். தொழில் உபகரணங்கள் அவசரமாகத் தேவையாக உள்ளன. அரசிடமும், தொண்டு நிறுவனங்களிடமும் கோரிக்கை வைத்தும் பலன் கிட்டவில்லை.

### ந.விஜயகுமாரி

எனது கணவர் இறந்துவிட்டார். ஏழு பிள்ளைகளுடன் தனித்துவிடப்பட்டபோது கடல்தான் எனகு வழிகாட்டியது. இப்பொழுது ஒவ்வொரு நாளும் கடலுக்கு போகிறேன். வேறு ஆட்களின் வள்ளத்தில் போவேன். வள்ளம் கிடைக்காவிட்டால் நடந்தாவது போவேன். எல்லா நாளும் மீன் கிடைக்கமென்றில்லை. மீன்கிடைத்தால் வீட்டில் அடுப்பெரியும்.

### ப.சிவமலர்

எனக்கு ஐந்து பிள்ளைகள். எனது கணவரும் கடற்றொழில்தான். அவரது உழைப்பில் மட்டும் குடும்பம் நடத்த முடியவில்லை. பிள்ளைகள் சாப்பிட வேணுமே நானும் கடலில் இறங்கிவிட்டேன். பெண்கள் கடலில் இறங்கலாமா என பலர் கேட்டார்கள். சிலர் எதிர்த்தார்கள். இப்படி கதைப்ப வர்களின் பேச்சை கேட்டால் நாங்கள் வாழ முடியாது.

பெண்கள் மீன்பிடிக்கிறார்கள் என்ற ஆச்சரியமிருந்தாலும், அதன் மறுபக்கம் பெரும் துயரம் நிறைந்தது. வறுமை, வேலையின்மை, அதிகாரிகளின் கவனிப்பின்மை, தொழில் உபகரணங்களின்மை, கடல் சவால்கள் என நீளமான பட்டியல் உள்ளது. ஆச்சரியங்கள் மட்டுமே சோறு போடாதென்பதை அந்த பெண்கள் நன்கு அறிந்துள்ளார்கள் என்பதை அங்கு சென்றபோது உணர்ந்தோம்.

# 'மிதிபடும்' கிராமங்கள்

மட்டுமைந்தன்

இந்தியாவின் அத்திப்பட்டி கிராமத்திற்கு நேர்ந்தது வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள். காட்டு யானைகளின் மூர்க்கம் அந்தக் கிராமத்தையே நிர்மூலமாக்கியது. மனிதர்கள் வாழவே முடியாததென வனந்தர மாகியது அந்த கிராமம். அத்திப்பட்டிகளாகிக் கொண்டிருக்கிறதா மட்டக்களப்பு மாவட் டத்தின் கிராமங்கள் பல என்பதே பதற வைக்கும் கேள்வியாக இப்பொழுது உருவெடுத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்கள் பல யானையுடன் போராடுவதே அன்றாட வாழ்வாக கொண்டுள்ள துயரக் கதை இது. யுத்த அவலங்களிற்குள் சிக்கி மீள்குடியேறிய கிராமங்கள் பல இந்த துயரக்கதையின் களமாகியுள்ளது.







மட்டக்களப்பின் படுவான்கரை கிராமத் தின் எல்லையோர கிராமங்களே இந்த துயர மையங்கள். கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, கிரான், செங்கலடி, வாகரை, வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராமங்கள் அவை.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து சுமார் 50 60 கிலோமீற்றர்களிற்கு அப்பாலுள்ளன. முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களாக இருந்தவை. வீடமைப்பு, வீதி, முறையான மின்சாரம், பாடசாலை, தொழில் வளங்கள் என அத்தியாவசிய தேவைகள் எதுவுமே எட்டிப்பார்க்காதவை. இப்பொழுது யானைகள் மட்டுமே கூட்டம் கூட்டமாக எட்டிப்பார்க்கின்றன.

இந்தஎல்லையோர கிராமங்களின் ஜீவனோ பாய இருப்பே விவசாயம்தான். வயலும், சிறுதானிய செய்கையும்தான் இந்த கிராம மக்களை உயிர்ப்புடன் வைத்துள்ளது. அதை விட அவர்கள் அறிந்ததெல்லாம் சூதுவாது அறியாமல் வெள்ளந்தியாக வாழ்வது.

இப்பொழுது அவர்கள் எதிர்கொள்ள முடியாத சவாலாக யானை ஊருக்குள் புக ஆரம்பித்துள்ளது.

யானை ஊருக்குள் புக ஆரம்பித்தால் முதலில் ஏற்படும் அபாயம், விவசாய நிலங் களின் அழிவு. யானைக் கூட்டத்தால் இந்த எல்லையோர கிராமங்களின் வாழ்வாதாரமே ஊசலாட ஆரம்பித்துள்ளது. கிராமங்களிற்கு அப்பாலிருந்த வயல்கள் எல்லாம் 'யானை புகுந்த வயல்களாக' உள்ளன. தென்னைகள், மரக்கறிகள் என எதுவும் தப்பவில்லை.

விவசாய நிலங்களில் சன்னதமாடி முடிந்ததும் வீடுகளிலும், மனிதர்களிலும் யானை உரசிப்பார்க்க ஆரம்பித்துள்ளது. தகரங்களினாலும், ஓலைகளினாலும் ஆன பெரும்பாலான வீடுகளும், சொற்ப அளவிலுள்ள சின்னஞ்சிறிய கல்வீடுகளும் யானைகளின் மூர்க்கத்தை எதிர்கொள்ள முடியாமல் நொருங்கிப் போயுள்ளன.

மாலை 4.30 மணியென்றால் யானைகள் வரும் நேரம். கிராமமே ஒருவித போர்க்கால நிலையையடைகின்றது. குடும்பங்கள் ஒன்று சேர ஆரம்பிக்கின்றன. யானை வெடி ஆங்காங்கே வெடிக்க ஆரம்பிக்கிறது. யுத்த காலத்தில் கேட்கும் வெடியோசை போலவே இந்த வெடியோசையும் எல்லோருக்கும் அச்சத்தையும், எச்சரிக்கையையும் ஏற்படுத்து கிறது. 'அங்கு யானையாம்ஞ் இங்கு யானையாம்' என்ற கதைகள் வேறு எல்லாவற்றையும் விட கடுகதியில் செல்கிறது.

யானை வரும் 4.30 இற்கு முன்னரே ஊர் அடங்கிவிடுகிறது. அதன் பின்னர் எல்லோரும் தற்காப்பு நிலைதான். அந்த நேரத்திலிருந்து நள்ளிரவு வரை யானைகள் கிராமங்களை அதகளம் செய்கின்றன. ஊரை இரண்டுபடுத்திவிட்டுத்தான் காட்டுக்கு திரும்புகின்றன.

அங்குள்ள பெரும்பாலான வீதிகள் காட்டு வீதிகள். காலையிலோ, மாலையிலோ பிரயா ணம் செய்பவர்கள் இன்னொரு அனர்த் தத்திற்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. வீதியோரமாக காடுகளிற்குள் ஒழிந்திருக்கும் யானைகள் பயணிகளிற்கு எமனாகும் சம்பவங்களும் உள்ளன.

உறக்கத்திலிருந்தபோது, பிரயாணம் செய்தபோது யானைத்தாக்குதலில் சிக்கி அங்கவீனமுறுவது இந்த கிராமத்தவர்கள் சந்திக்கும் அடுத்த கொடுமை. யானைத்தாக் கத்தால் கை, கால்களை இழந்த பலர் எந்தவித அடிப்படை வசதிகளுமில்லாமல் இன்றும் அந்த கிராமங்களில் சிரம வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யானை அச்சுறுத்தலால் பிள்ளைகளை யாரும்வீடுகளைவிட்டு அதிகதூரம் அனுப்புவ தில்லை. பாடசாலைகளும் அந்தகிராமங்களை விட்டு வெகு தொலைவில் உள்ளன. பாட சாலையின் அமைவிடமும், யானை அச்சுறுத்தலும் இணைய மாணவர்களின் கல்வி தொலைவாகிக் கொண்டிருப்பதே விடையாகிறது. கணவன்மார் யானைக் காவலிற்காக இரவில் சென்றுவிட, பெண்கள் கூட்டம்கூட்டமாக தங்குவதே வாடிக்கை. பல குடும்பங்கள் ஓரிடத்தில் கூடும்போது பிள்ளைகள் இரவில் படிப்பதை கைவிடுகின் றனர்.

யானைகளைக் கட்டுப்படுத்த அரிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்பதே கிராமமக்களின் ஏகோபித்த ஒரே குற்றச் சாட்டு. யானைப்பிரச்சனையென்றால் அதிகாரிகளிடமுள்ள 'சர்வரோக நிவாரணி' யானைவெடி மட்டும் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். கிராமங்களை வளைத்து மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதும், மின்வேலிக்காக நாட்டப்பட்ட மரக்கட்டைகளை வெகுசாதாரணமாக தூக்கியெறிந்துவிட்டு யானைகள் ஊருக்குள் நுழைகிறதென்கிறார்கள்.

யுத்தத்தில் கணவனை இழந்த குடும்பப் பெண்ணொருவரை சந்தித்தோம். வட்டிக்கு பணம்வாங்கி அவர் அமைத்த சிறிய பெட்டிக்கடையில் வருமானம் வருவதற்கு முன்னரே யானைகள் நிர்மூலமாக்கிவிட்டன. வட்டிப்பணத்தை திரும்ப கொடுக்க முடியாமலும், குடும்பத்திற்கு ஒருவேளை உணவில்லாமலும் திண்டாடும் அந்த பெண்மணி நம்மிடம் கதறி அழுதார். தற்கொலையை விட தனக்கு வேறுவழி யில்லையென்றபோது என்ன பதில் சொல்வதென்றே நமக்கு தெரியவில்லை. அந்த மக்களும் வாக்களித்து தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும், மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரசஅதிகாரிகளிற்கும் அவரதும், யானைத் தாக்கத்தால் அவதியுறும் அந்த கிராமங்களின் சனங்களினதும் கண்ணீர்த்துளிகள் சமர்ப்பணம்!



**யானை அச்சுறுத்தலால் பிள்ளைகளை யாரும் வீடுகளை விட்டு அதிக தூரம் அனுப்புவதில்லை. பாடசாலையின் அமைவிடமும், யானை அச்சுறுத்தலும் இணைய மாணவர்களின் கல்வி தொலைவாகிக் கொண்டிருப்பதே விடையாகிறது.**

**யானைகளின் வரவை கட்டுப்படுத்த கிராமங்களை சுற்றி மின்சார வேலி அமைப்பதைவிட, பனைநாட்டல் அதிக பலன் கொடுக்கிறதென ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. முக்கோண வடிவில் பனை நாட்டி யானைகளின் அத்துமீறலை தடுக்கலாமென்பதை இலங்கையிலும் நிரூபித்துள்ளனர். நீண்டகால திட்டமான பனை நாட்டலை எல்லையோர கிராமங்களில் இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும். குதிரைகளை காட்டில் விடுவதன்மூலமும் யானையின் அத்துமீறலை கட்டுப்படுத்தலாமென சூறுகிறார்கள் இங்குள்ள வயதில் மூத்தவர்கள்.**

**யானைகளின் அத்துமீறல் எல்லைகடக்க, மனிதர்களும் மோசமான எதிர்வினையை ஆற்ற தொடங்குகிறார்கள். இந்தப்பகுதிகளில் யானைகளின் இறப்பும் அதிகமாக உள்ளது. இந்த வருடத்தில் மட்டும் ஏழு யானைகள் கொல்லப்பட்டுள்ளன. ஒன்று துப்பாக்கியால் சுடப்பட்டும், ஏனையவை வேறுவேறு வடிவங்களிலும் நடந்துள்ளது. யானையின் உணவில் வெடிகுண்டை மறைத்துவைத்து கொல்லும் முறையால் அதிகளவு யானைகள் கொல்லப்படுவதுடன், அது பலத்த விமர்சனங்களையும் சந்தித்துள்ளது.**

## கச்சக்கொடி சுவாமிமலை கிராமம்

கொக்கட்டிச்சோலை பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கிராமம். காட்டுயானைகளின் மூர்க்கத்தின் குவி மையம். கிட்டத்தட்ட கிராமமே காணாமல் போகும் தறுவாயில் உள்ளது. இந்த கிராமத்தில் மட்டும் இதுவரை 30 பேரை யானைகள் பலியெடுத்துள்ளன. யானைக்கு அஞ்சி பல குடும்பங்கள் வேறிடங்களிற்கு குடிபெயர்ந்து விட்டன.

## கஜராம கிராமம்

மிகவும் பின்தங்கிய கிராமங்களிலொன்று. இந்த கிராமத்தில் நாம் சந்தித்த ஒவ்வொருவரின் கண்களிலும் யானைப்பீதி பளிச்சிடுகிறது. பெரும்பாலும் விவசாயிகள் வாழும் இந்த கிராமம் யானைத் தாக்குதலால் சின்னாபின்னப்பட்டு போயுள்ளது. மாலையனதும் கிராமமக்கள் ஆதி மனிதர்களாகிவிடுகிறார்கள். காட்டு மரங்களை தறித்து குடும்பம்குடும்பாக ஒன்று சேர்ந்து பெரும் நெருப்பு மூட்டுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசிய சொத்தாக யானை வெடியுள்ளது. மாலையானால் யானையை எப்படி எதிர்கொள்வதென்ற சவால்த்தான் ஒவ்வொருவரின் எதிரிலும் விஸ்பரூபம் எடுக்கிறது.



சோதிட
ஆலோசகர் சி.இராசநாயகம்
0776147392



# சோதிடம் தரும் வாரபலன்கள்

## 21.02.2016 முதல் 27.02.2016 வரை

### மேடராசி

தேகசுகம் கிட்டுதல், சில அவதூறுகள் கேட்டல், உழைப்பில் ஊக்கம் இருத்தல், தூரத்தில் இருந்து செய்தி கிட்டுதல், அலைச்சல்கள் காணப்படுதல், செய்தொழில் மேன்மை, மனதில் சந்தோசம் கிடைத்தல், இடையில் துக்க நிலை, பயண எச்சரிக்கை, பொருள் விரயம், வார இறுதியில் எல்லாம் நன்மையாய் அமைதல், லாபமீட்டுதல் போன்றவை காணப்படும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,23,27 திகதிகள்.**

### இடபராசி

இனசனபந்துக்களால் சில துன்பம் துயரம் காணுதல், சில நண்பர்களைப் பகைக்கும் நிலை, தேகசுகம் பாதித்தல், நம்பிக்கைக்கு இடையூறு காணுதல், கருமங்கள் கைகூடிவருதலில் தாமத நிலை, சில பிரச்சனைகளுக்கு மனப்பயம் கொள்ளுதல், பொன்பொருள் சேர்த்தல், சில தான,தர்ம காரியங்களில் ஈடுபடல், குடும்ப சுகம் இருத்தல், மற்றும் சிறு கௌரவக் குறைவு, பணவிரயம், பிரயாணம் இருத்தல், நல்ல போசனம் கிடைத்தல் என்பவை தரும்,
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,24,26 திகதிகள்.**

### மிதுனராசி

சுபச்செய்தி கிட்டுதல், வியாபாரிகளால் நன்மை, நண்பர் வருகை, சுற்றத்தவர் வருகை, நல்ல அணிகலன் சேர்தல், பெண்களால் நன்மை உண்டாதல், இடையில் உடல் நலம் பாதித்தல், சிறு நஷ்டம் இருத்தல், வெற்றிக்காக உழைத்தல், இலட்சுமிகரமான நிலையைக் காணுதல், குடும்பசுகம், உறவுகள் வலுவாய் அமைதல், மற்றும் மறதிக்குணம், தடங்கல் நிலை, மன அச்சநிலையும் காட்டும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 23,24,26 திகதிகள்.**

### கடகராசி

வாக்குவாத நிலை, நஷ்டநிலை, வார நடுப்பகுதியில் லாபகரமான நிலை, பொருள் விரயமும் தருதல், பெண்களுக்கு நோய் பிணி காணப்படுதல், புத்திமேன்மையால் சிலகருமங்கள் அனுகூலமாய் முடிவடைதல், மனதில் ஏதாவது ஒரு கருமத்தால் துயரம் கொள்ளுதல், மற்றும் சுபமான நிலையை வார இறுதியில் அடையவும், சில அவதூறுகள் கேட்கவும், அதிகாரிகளை சந்திக்கும் நிலையும் உண்டு.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,25,27 திகதிகள்.**

### சிம்மராசி

தலைவலி அதிகம் இருத்தல், சிறுசிறு பிணக்குகள் சச்சரவுகளில் சிக்கிக் கொள்ளுதல், முயற்சிக்குப் பலன் கிட்டுதல், பணவரவுகள் இருத்தல், குடும்பசுகம் கிடைத்தல், இனசனபந்துகளால் சுகம் இருத்தல், இடையில் பொருள் விரயம் தருதல், இருக்கும் ஸ்தானத்தில் மாற்றம், வார இறுதியில் உடல் நலம் நன்றாய் அமைதல், பகைவர்களை வெற்றி கொள்ளல், மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் சுகநலனுக்காய் பணவிரயமும் ஏற்படும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 21,22,25 திகதிகள்.**

### கன்னிராசி

தேகசுகம் இருத்தல், செய்தொழில் லாபம் வெற்றி தருதல், கௌரவம், புகழ் கிட்டுதல், எடுத்த கருமங்கள் அனுகூலமாய் முடிவடைதல், சேமிப்பு நிலை தருதல், பிரயாணங்களால் சில நஷ்டம் தருதல், மறைமுகமாய் சில எதிரி, பகையாளி தொல்லை இருக்கச் செய்தல், குடும்ப சுகம் பாதிப்பில்லாமல் அமைதல், சில கருமங்களால் மனச்சஞ்சலம், நல்ல செய்தி கிட்டுதல், பிறரது உதவி தேவைப்படும் நிலையும் காட்டும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,24,27 திகதிகள்.**

### துலாம்ராசி

செல்வம், சேமிப்பு நிலை, பெண்களால் சுகம் கிட்டுதல், கருமங்களில் சுக பலன் அமைதல், சௌபாக்கியக் குறைவு, மனதில் சந்தோசம், பயணம் செய்யும் நிலைகள் இருத்தல், இனசனபந்துக்களைச் சந்தித்தல், நோய் பிணியால் பணவிரயம் இருத்தல், குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் தோன்றி மறைதல், மனக்கவலை இருத்தல், மற்றும் வார இறுதியில் லாபம், சுகம், சித்திகள், பொருள்வரவு, ஆடை, ஆபரணம் சேர்தல், போன்றவற்றையும் அனுபவிக்கச் செய்யும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 23,26,27 திகதிகள்.**

### விருச்சிகராசி

புத்தியைப் பயன்படுத்தாமல் இருக்கும் நிலைகளில் சில மாற்றங்களை எதிர்கொள்ளல், அதிகாரமாகச் செயற்படுதல், மனதில் சந்தோச உணர்வுகள் காணப்படுதல், சில எதிரி பகையாளிகளை வெற்றி கொள்ளல். குடும்பத்தில் சிலருக்கு நோய், பிணி காட்டுதல், பணவிரயம் உண்டாதல், அவமானம் பெறும் நிலை, மற்றும் காரியம் சித்தியாய் முடிதல், தூர இடத்திலிருந்து செய்தி அறிதல், உழைப்பினால் ஊக்கம் காட்டுதல், கலை சம்பந்தமான விடயங்களில் ஆர்வம் போன்றவை அமையும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,23,27 திகதிகள்.**

### தனுசுராசி

கலகம் போன்ற நிலை குடும்பத்தில் உண்டாதல், மன அமைதி இல்லாது சஞ்சலம் குழப்பம் பெறுதல், வார நடுப்பகுதியின் மேல் குடும்பசுகம், இனசனபந்து சுகம் என்பன இருந்துவரல். நல்ல ஆடை அணியும் நிலை, பண்பான மனிதர்களது ஆதரவு, படுக்கைச்சுகம், இலட்சுமிகரமான பார்வை சேர்தல். சோக உணர்வு வந்து மறைதல், பிரயாணம் நிலை காணுதல், வயிற்றில் வியாதி காணப்படுதல். மற்றும் நோய், பிணி தொடர்புக்காய் பணவிரயம் இருக்கவும், எதிரிகளால் அச்சமடையும் நிலையும் காணப்படும்..
**அதிர்ஸ்ட நாட்கள்: 21,25,27 திகதிகள்.**

### மகரராசி

தேகசுகம் பாதிக்கப்படுதல், வீண் அலைச்சல், வீண் செலவு, முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படுதல், பெண்கள் சிலரால் சில சுகம், சில நன்மை அனுபவித்தல், சில சம்பத்துக்கள் சேர்தல், குடும்பசுகம் காணப்படுதல், பண்பாக நடந்து மதிப்பு பெறுவார், நோய், பிணி சார்பில் பணவிரயம் இருத்தல், மனதில் கவலை ஏற்பட்டு மறைதல், பிரயாணங்களில் எச்சரிக்கை, வயிற்றில் நோய் அதிகப்படவும், மற்றும் எடுத்த தொடுத்த கருமங்கள் தாமத நிலையும் பெறும் பலனுண்டு.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,24,26 திகதிகள்.**

### கும்பராசி

பிரயாணம் மேற்கொள்ளல், தேகசுகம் குறைவு நிலையிலிருத்தல், சிறுசிறு அவமானப்படும் நிலை உருவாதல், புத்தி மந்த நிலை தருதல், வகிக்கும் பதவிக்கு குறைவு நிலை, நோய், பிணி, போசன சுகம், செய்கருமம் லாப நிலை தருதல், பணவிரயம், மனப்பயம், மற்றும் சௌபாக்கிய நிலை பேணுதல், சுற்றத்தினர் வருகை, சுபமான செய்திகள் அறிதல், கடின உழைப்பையும் மேற்கொள்ளச் செய்யும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 22,24,27 திகதிகள்.**

### மீனராசி

சிறுசிறு பொருள் நஷ்டம், சிறுசிறு பகைகள், பிரயோசனமற்ற அலைச்சல்கள், மனக்குழப்பம், குடும்ப சுகம், இனசனபந்துக்களால் சுகம் கிடைத்தல், பிணக்குகள் சச்சரவுகளில் சிக்கிக் கொள்ளல், வார நடுப்பகுதியயன் மேல் மனச் சந்தோசம், தேகசுகம் நன்றாய் அமைதல், உணவு விவகாரம் திருப்தி நிலை, குடும்ப தாம்பத்திய சுகம் உண்டாதல், மற்றும் நோய், பிணி தொடர்பு செலவீனம், நஷ்ட நிலையும் நடந்தேறும் நிலையும் அமையும்.
**அதிர்ஸ்ட நாட்கள்: 21,25,27 திகதிகள்.**

சந்திராஷ்டமம் உள்ள நாட்களில் நோய், பிணி, துன்பம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்புக்கள் ஏற்படலாம் என்பது சோதிட விதி ஆகும். இதனைக் கருத்தில் கொள்ளவும்.

### இவ்வார சந்திராஷ்டமம்.

தனு, மகரம், கும்பம், மீனம், ஆகிய நான்கு இராசிக்காரர்களுக்கும் இவ்வாரம் அவர்களது இராசிக்கு 8 ஆம் நிலையில் சந்திரன் வரும் போது சந்திராஷ்டம நிலையைப் பெறுவார்.

ஏனைய இராசிக்கும் இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.



மட்டக்களப்பின் முதலைக்குடா மகாவித்தியாலத்தில் இரத்ததான நிகழ்வு நடந்துள்ளது. பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



தீபம் X RAY



தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஒன்றுமை முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவில் இப்பொழுது பலவீனமாக உள்ளது. ஒற்றுமையென்பதன் இலக்கணமாக தமிழ்தேசிய கூட்டமைப்பு இருந்தது ஒரு காலம். கூட்டமைப்பை குழப்ப, கூட்டமைப்பின் எம்.பிக்களை விலை பேச அப்போதைய மகிந்த ராஜபக்ச மலையாள மந்திரீகம் மட்டும்தான் செய்யாத குறை. மற்றதெல்லாம் செய்து பார்த்தார். மகிந்த வீசிய வலையில் பியசேன மட்டும்தான் சிக்கிய எம்.பி. தேர்தல் சமயத்தில் விரல்விட்டு எண்ணத்தக்க உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் விலை போனார்கள். அவர்களின் முகவரியே இப்பொழுது இல்லை.

ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் யாழ்ப்பாணத்திவ் நடந்த மகிந்தவின் தேர்தல் பிரசாரகூட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவரையாவது மேடையேற்ற வேண்டுமென தலைகீழாக நடந்து பார்த்தார்கள். பலகோடி ரூபா பேரத்துடன் இரவிரவாக மகிந்த தரப்பினர் தட்டாத கூட்டமைப்பு முக்கியஸ்தர்களின் கதவுகள் இல்லை. வல்வெட்டித்துறையில் உள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பு பிரமுகர் ஒருவரை அணுகி அந்த மேடையில் ஏறினால் பத்துகோடி பேரம் பேசினார்கள். 'தயவுசெய்து எழும்பிப் போங்கோ' என கதவு சாத்தினார் அவர்.

'எப்படியிருந்த கட்சி இப்படியாயிற்றே' என்றுதான் கேட்க வேண்டும் போலுள்ளது இப்பொழுது. தீவிர தமிழ்தேசியவாதிகள் முன்னர் பேரினவாதம், துணைக்குழு, ஒட்டுக்குழு, சலுகைக்கட்சி என வகைபிரித்து அவர்களை வறுத்தெடுத்தார்கள்.

உலகம் ஒரு வட்டம் என்பார்கள். இப்பொழுது சிரிப்பது எங்கள் முறையென எதிர்த்தரப்பினர் சிரிப்புசிரிப்பாக சிரிக்கிறார்கள் நம்மாட்களின் நடவடிக்கைகளை பார்த்து.

என்னதான் ஒற்றுமையென பெரிதாக பேசினாலும் உள்ளுக்குள் ஆளையாள் கவிழ்த்து விடும் கொலைவெறியுடன்தான் நமது பிரதிநிதிகள் உள்ளனர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளிற்குமிடையில் நடக்கும் சந்திப்புக்களில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் மரபில் இப்பொழுது மாற்றம் வருகிறது. அதிக 'குழப்படி' காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கு அழைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனிற்கு சில சமயங்களில் 'கல்தா' கொடுக்கப்படுகிறது. இதை ஆராய்ந்தால் விடயம் நாறுகிறது.

'சப்ரா' எம்.பிதான் இதன் பின்னணியில் இருக்கிறாராம். சித்தார்த்தன்தான் கடந்த பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றவர். 'சித்தார்த்தன் தொடர்ந்து செய்திகளில் அடிப்பட்டு மக்களிடம் பிரபல்யமானால் அடுத்த தேர்தலில் நமக்கு வில்லங்கமாகி விடுவார். அடுத்தமுறை தொகுதிவாரி தேர்தல், இம்முறையே தட்டித்தடுமாறி கடைசியிடத்தைத்தான் பிடித்தேன். சித்தார்த்தனிற்கு மானிப்பாயிலும் செல்வாக்கு உள்ளது. வட்டுக்கோட்டையிலும் செல்வாக்கு உள்ளது. இது நமக்குத் தான் ஆப்பாகும்' என கூட்டல்கழித்தல் கணக்கு பார்த்த 'சப்ரா' எம்.பி, தலைமையிடம் குடைச்சல் கொடுத்து சித்தார்த்தனிற்கு 'கல்தா' கொடுத்து வருகிறாராம்.

தனது பத்திரிகையிலும் சித்தார்த்தன் பற்றிய ஒரு செய்தியும் வரவே கூடாதென கண்டிப்பான கட்டளையிட்டுள்ளார்.

அதேபோல, வன்னி மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியில் போட்டியிட்டு எம்.பியான சிவமோகன் அடித்த பல்டியும் ரசிக்கும்படியான காரியமல்ல. முன்னர் மகிந்த ராஜபக்ச சிறியகட்சிகளின் பிரதிநிதிகளை விலைபேசி சோரம் போக வைத்ததுடன் இதனை ஒப்பிட்டு சமூகவலைத்தளங்களில் பரவலாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் அனந்தி சசிதரனிற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி வேட்புமனு வழங்க முன்வந்தபோது, 'நமது கட்சிக்காரரிற்கு எப்படி நீங்கள் வேட்புமனு வழங்கலாம்' என முரண்டு பிடித்துவிட்டு, பின்னர் சிவமோகனை 'வரவேற்றது' உண்மையில் சமச்சீரான நடவடிக்கையல்ல என்பது குற்றச்சாட்டு.

எல்லோரும் தமிழ்தேசிய கூட்டமைப்புதானேயென இதில் சமரசம் செய்து கொள்வதைவிட, கூட்டமைப்பு நிலைத்து நிற்பதெனில் கூட்டணி தர்மங்களை கடைப்பிடிப்பதுதான் சிறந்ததென நமது தலைவர்களை வலியுறுத்துவதுதான் மக்கள் கடமை.

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்



க.சிறிஸ்கந்தவேல்



த.நடனேந்திரன்



ஆ.பெஸ்ரியன்

**செல்வம்**

நான்கு கேள்விகளை தயார் செய்து கொண்டு வீதிக்கிறங்கினோம்.

நம்மவர்களின் பொதுஅறிவு, உலகநடப்புக்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் என்பவற்றை பரிசோதித்து பார்க்க ஒரு வாய்ப்பாகவும் இருக்குமல்லவா. ஆங்காங்கே அகப்பட்டவர்களை ஓரங்கட்டி .கேள்விகளை கேட்டோம்.

கேள்வியும் கையுமாக அலைந்த நமது ரீமிடம் சிக்கியவர்கள் கரவெட்டியை சேர்ந்த க.சிறிஸ்கந்தவேல், அராலியை சேர்ந்த த.நடனேந்திரன், குருநகரை சேர்ந்த ஆ.பெஸ்ரியன், துன்னாலையை சேர்ந்த ர.கமல், கொக்குவிலை சேர்ந்த ர.நிருத்தியா ஆகியோரே.

'டக்கு பக்கு' பதில்களை படித்து பாருங்கள்.

**கேள்வி: யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் பெயர் என்ன?**
**விடை: என். வேதநாயகன்**

***க.சிறிஸ்கந்தவேல்:*** *யாழ்ப்பாண அரசஅதிபரை தெரியாமலா? ஆனால் அவரது தந்தையில் பெயர்தான் யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். உங்களுக்கு தெரியுமா? (ஆள் ஆபத்தான பார்ட்டியாக இருப்பாரோ?)*

***த.நடனேந்திரன்:*** *என்.வேதநாயகன்தான் அரச அதிபர். எத்தனை பேரிடம் இதை கேட்டீர்கள். நம்மவர்கள் இதுகூட தெரியாமலா இருக்கிறார்கள்.*

***ஆ.பெஸ்ரியன்:*** *பள்ளிக்கூடத்தில ஆசிரியர் கேட்பதை போயிருந்தது. பிழையாக சொன்னால் அடிகிடி விழுமா?*

***ர.கமல்:*** *எனக்கு சரியாக தெரியுமே. முன்னர் இருந்தவர் அருமைநாயகம். இப்ப வேதநாயகன். பெயரின் முடிவை பார்த்து சகோதரர்களோ என்றும் நான் யோசித்ததுண்டு.*

***ர.நிருத்தியா:*** *இப்ப புதிசா வந்தவர். பெயர்.. வந்து... வந்து... அ.. கண்டுபிடிச்சிட்டன். வேதநாயகம். சரியா?*

**கேள்வி: இலங்கையிலுள்ள நீளமான பழைய பாலம் எது?**
**பதில்: மட்டக்களப்பிலுள்ள கல்லடி பாலம்**

***க.சிறிகந்தவேல்:*** *எங்கட ஊரிலுள்ள பாலத்தின்ர பெயரே எனக்கு தெரியாதப்பா... இதில இலங்கையிலுள்ள நீளமான பாலமா... கண்ணை கட்டுதே. நீங்களே சொல்லுங்கப்பா.*

***த.நடனேந்திரன்:*** *அட இலங்கையில் அப்படியெல்லாம் பாலம் இருக்குதா? எனக்குத்தான் தெரியாமல் போய் விட்டுதே... இந்த விடையை நான் சொன்னது மாதிரி நீங்களே போட்டு விடுங்க.*

***ஆ.பெஸ்ரியன்:*** *முதல் கேள்வி மாதிரி சிம்பிளான கேள்வியள் கேட்பியள் என்று பார்த்தால்... கவிழ்த்து விட்டிட்டியளே பாஸ். என்னவாக இருக்கும்... (கடுமையாக யோசிக்கிறார்) தெரியலை பாஸ்... சொல்லுங்க...*

***ர.கமல்:*** *இந்த கேள்விக்கு இப்பவே பதில் சொல்ல வேணுமா? வீட்டபோய் புத்தகத்தை பார்த்திட்டு தீபம் அலுவலத்திற்கு போன் பண்ணவா?*

***ர.நிருத்தியா:*** *நீளமானதா... சமூகக்கல்வி புத்தகத்தில படிச்சிருப்பன். இப்ப ஞாபகம் வரயில்லை. ஏன் இப்பிடி கஸ்ரமான கேள்வியள் கேட்கிறியள்?*

**கேள்வி:மன்னாரிலுள்ள புராதன கோட்டை எது?**
**பதில்: அல்லிராணி கோட்டை**

***க.சிறிகந்தவேல்:*** *அப்படி பெயருகள் நினைவில் இருக்கும் (சிரிக்கிறார்). அல்லிராணி கோட்டைதானே. எலிசபெத் மகாராணி, டயானா ஞாபகத்திலிருப்பதை போல நமது அல்லிராணியும் ஞாபகத்தில் இருக்கிறது.*

***த.நடனேந்திரன்:*** *யாழ்ப்பாண கோட்டை தெரியும். மன்னாரில... (கடுமையாக யோசிக்கிறார்) ஆ... ஏதோஒரு ராணி... என்ன ராணியென்பதுதான் வருகுதில்லை.*

***ஆ.பெஸ்ரியன்:*** *யாழ்ப்பாண கோட்டைக்குள் சென்றே நான் பார்த்ததில்லை. இதுக்க மன்னார் கோட்டையா... இப்பிடி கேள்வியள் நீங்கள் கேட்கக்கூடாது.*

***ர.கமல்:*** *அல்லிராணி கோட்டை*

***ர.நிருத்தியா:*** *நாங்களெல்லாம் படிப்பில கெட்டி. அதை நிரூபிக்க ஒரு சான்ஸ் வந்திட்டுதே. அல்லிராணி கோட்டை.*

**கேள்வி: அண்மைக்காலமாக ஹிந்தித் திரையுலகில் கொடிகட்டிப்பறக்கும் சிங்கள நடிகையின் பெயர்?**
**விடை: ஜக்குலின் பெர்னாண்டஸ்**

***க.சிறிஸ்கந்தவேல்:*** *நான் சினிமாப்படமே பார்க்கிறதில்லை. இதில நடிகையின் பெயரா... அதுவும் சிங்கள நடிகை. நீங்கள்தான் சொல்ல வேணும்.*

***த.நடனேந்திரன்:*** *ஏன் இப்பிடி கடுமையான கேள்வியள் கேட்கிறியள். தமிழ் நடிகையென்றால் ஓரளவு தெரியும். இப்ப நயன்தாரா நல்லா நடிக்கிறா. சிங்கள நடிகை ஒருவரையும் தெரியாது.*

***ஆ.பெஸ்ரியன்:*** *உண்மைய தெரியாது*

***ர.கமல்:*** *நம்ம ஜக்குலின் பெர்னாண்டஸ். நடிகைகள் மேற்றர் எனக்கு தெரியும். அது சரி என்ன பரிசு தரப் போறியள். (தம்பி... அண்ணனுக்கு ஒரு பார்சல் பரிசு)*

***ர.நிருத்தியா:*** *கடவுளே மாணத்தை வாங்கிப் போடுவியள் போல.. திரிஷா, நயன்தாரா என்றால் தெரியும். இவவை யாருக்கு தெரியும்.*



ர.கமல்



ர.நிருத்தியா

மாயாமகேஸ்
mayamahes90@gmail.com



எல்நினோ என்பது பசுபிக் நீரோட்டத்தில் காணப்படும் வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பாகும். மேற்கு பசுபிக் கடலில் ஏற்படும் உயர்ந்த காற்றமுத்தத்தாலும் கிழக்கு பசுபிக் கடலில் ஏற்படும் தாழ்ந்த காற்றமுத்தத்தாலும் ஏற்படுகின்றது.

# காலநிலை மாற்றத்தில் எல்நினேவின் பங்கு

காலநிலை மாற்றம் என்பது தொடர்ச்சியான ஒன்றாகும். காலநிலை மாற்றத்தின் விளைவாக நாம் பருவ காலங்களை அனுபவிக்கின்றோம். கோடை காலம், மாரி காலம், இலையுதிர் காலம், இலை துளிர்காலம் என்பன ஆண்டொன்றில் மாரி மாரி வரும் பருவ காலங்களாகும். பூமியின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இலங்கை போன்ற நாடுகளில் பருவகாலங்கள் அழகானவை.இங்கு பனிப்பொழிவுகளோ தொடர்ச்சியான வரட்சியோ இருந்ததில்லை. இது போன்ற நாடுகளில் காலநிலை சாதகமாக இருப்பதால் விவசாயமானது பிரதான தொழிலாக காணப்படுகின்றது.

விவசாயத்திற்கு தேவையான மழைவீழ்ச்சியை தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வடகீழ் பருவக்காற்று தருகின்றது. தொன்றுதொட்டு பருவ மழைக் காலங்களைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட காலத்தில் மழையை நம்பியிருக்கும் விவசாயத்தை ஆரம்பிப்பர். மழை வீழ்ச்சிக்கு ஏற்ப விதைப்பு மற்றும் அறுவடை காலத்தை ஆண்டாண்டு காலமாக பெற்ற அனுபவத்தை வைத்து தீர்மானிப்பர்.

தற்காலத்தில் சில சமயங்களில் குறித்தகாலத்தில் விவசாயம் செய்வதென்பது மழைக்கோல மாற்றத்தால் பாதிக்கப்படுகின்றது. இக்காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மழைப்பொழிவு விவசாயத்தில் மட்டுமல்லமக்களின் வாழ்விடத்தையும், வாழ்க்கையையும் பாதிக்கின்றது.

அண்மையில் இலங்கை மற்றும் இந்தியா எதிர்கொண்ட தொடர்ந்த மழையும் அதிகரித்த வெள்ளமும் மக்களின் வாழ்க்கையைப் பாதித்தவிதம் நாம் அறிந்ததே. இதன் மூலகாரணம் உலக வெப்பநிலை அதிகரிப்பென்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இத் திடீர் பெரு மழைக்கு காரணமாக பசுபிக் கடலில் உள்ள நீரோட்டத்தின் வெப்பநிலை மாற்றம் சொல்லப்படுகிறது. பாதிப்பை ஏற்படுத்தும் இந்நீரோட்டம் பசுபிக் மத்திய கிழக்கு பகுதியில் காணப்படுகின்றது.

இது அண்ணளவாக சர்வதேச தேதிக்கோட்டுக்கும் 120 பாகை மேற்கிற்கும் இடையில் காணப்படுகின்றது. இந்நீரோட்டத்தில்ஏற்படும் காலநிலை மாற்றம் இலங்கை, இந்தியாவையும் பாதிக்கும். இவற்றின் தன்மையைக் கொண்டு இவை எல்நினோ, லாநினோ என்றழைக்கப்படுகின்றன. இவை ஸ்பானிய மொழிச்சொற்களாகும். இந்நீரேட்டத்தில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பைஎல்நினோ என்றவாறும் வெப்பநிலை குறைவை லாநினோ என்றவாறும் அழைக்கப்படுகின்றது.

இவை ஒன்றுக்கொன்று எதிரான தன்மையைக் கொண்டவை. இந்நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றம் சில சமயம் குறுகிய காலத்திலும் சிலசமயம் நீண்ட காலத்திலும் ஏற்படக்கூடிய ஒழுங்கற்ற மாற்றமாகும். இம்மாற்றம் கடலை மட்டுமல்ல உலகத்தின் காலநிலையிலும் செல்வாக்கு செலுத்தும்.

எல்நினோ என்பது பசுபிக் நீரோட்டத்தில் காணப்படும் வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பாகும். மேற்கு பசுபிக் கடலில் ஏற்படும் உயர்ந்த காற்றமுத்தத்தாலும் கிழக்கு பசுபிக் கடலில் ஏற்படும் தாழ்ந்த காற்றமுத்தத்தாலும் ஏற்படுகின்றது. இதன் விளைவாக அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் வழமையான வெப்பநிலையைவிட அதிக வெப்பநிலையை உணரக்கூடியதாக இருக்கும்.

லாநினோ என்பது எல்நினோவுக்கு எதிரானது. இது பசுபிக்நீரோட்டத்தில் ஏற்படும் வெப்பநிலைக்குறைவை அதாவது குளிர் நிரோட்டத்தைக்குறிக்கும். மேற்கு பசுபிக் கடலில் ஏற்படும தாழ்ந்த் காற்றமுத்தத்தாலும் கிழக்கு பசுபிக் கடலில் ஏற்படும் உயர்ந்த காற்றமுத்தத்தாலும் ஏற்படுகின்றது. இவற்றின் மாற்றம் சமுத்திரம், அதில் வாழும் உயிர்கள், காலநிலை மற்றும் மழைவீழ்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும். இம்மாற்றங்கள் பசுபிக் கடலை அண்டிய நாடுகளின் விவசாயம், மீன்பிடி என்பவற்றைப் பாதிக்கும்

பசுபிக் கடலில் உள்ள நீரோட்டத்தில் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தால் உருவாகும் காலநிலை மாற்றத்தை அறிந்து கூறக்கூடிய வகையில் தெற்காசிய நாடுகளிற்கான எல்நினோ எதிர்வுகூறல் திட்டம் இந்தியாவினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

நீங்கள் எழுதியவை...



இவ் எதிர்வு கூறல்களின்படி 2016 ஆம் இந்நீரோட்ட மாற்றத்தினால் இலங்கையும் பாதிப்புக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.







# கூல் ஹெல்மெற்!

மலையக தமிழ்ச்சிறுவனொருவன் புதிய கண்டுபிடிப்பொன்றை நிகழ்த்தி அசத்தியுள்ளான். குளிரூட்டப்பட்ட தலைக் கவசம் தயாரித்து எல்லோரது தலைகளையும் குளிர வைத்துள்ளது எஸ்.தருமசீலன் என்ற பதினைந்து வயது மாணவன். நுவரெலியா ராகலை சென்லியநாட்ஸ் தமிழ் மகாவித்தியால மாணவனே தருமசீலன்.

இந்த கண்டுபிடிப்பு மொத்த இலங்கையையும் தருமசீலனை திரும்பிப்பார்க்க வைத்துள்ளது. சூரியசக்தியில்தொழிற்படும் இந்த தலைகவசத்தை அணிவதால் முடி உதிர்தல், முடி நரைத்தல் போன்ற பிரச்சனைகளிலிருந்து தப்பிக்கலாம். இந்த ஆச்சரிய கண்டுபிடிப்பையடுத்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழகம் தருமசீலனை அழைத்து கௌரவித்துள்ளது.

தருமசீலன் 14வது வயதில் சமையல் உபகரணம் கண்டு பிடித்து, நுவரெலியா மாவட்டத்தின் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டார்.அதற்கடுத்த வருடத்திலேயே சிறிய ரக விமானமொன்றை தயாரித்து எல்லோரையும் அசர வைத்துள்ளார். அடுத்த கண்டுபிடிப்பு இந்த தலைக்கவசம்.

தீபம் செய்தியாளருடன் பேசும்போது, 'சூரியசக்தியில் இயங்கும் விதமாக இதனை தயாரித்துள்ளேன். சூரிய சக்தி கிடைத்ததும், தலைக்கவசத்திற்குள் உள்ள மின்விசிறி சுழலும். இதன்மூலம் தலைக்கவசத்திற்குள் வெப்பநிலை சீராக இருக்கும்' என்றார்.

தருமசீலனின் கண்டுபிடிப்பை அறிந்த கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணனும் தனது அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்துள்ளார். இத்துடன் தருமசீலன் ஓயவில்லை. 'அடுத்த கண்டு பிடிப்புக்களில் ஈடுபட்டுள்ளேன். மனிதன் இயக்கும் ரொபோ, எரிபொருள் இல்லாமல் இயங்கும் மோட்டார் வண்டி என்பன தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளேன்' என்றார்.

எரிபொருள் இல்லாத மோட்டார் வண்டியா... விரைவாக கண்டுபிடியுங்கள் தருமசீலன்!



## தமன்னா தத்துவம்

நடிகையானதற்கு சந்தோசப்படுகிறேன் என்று கூறியுள்ளார் தமன்னா. நடிகையானதால் ஒவ்வொருநாளும் புதுப்புது அனுபவங்கள் கிடைக்கிறது. ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான வேடங்கள் கிடைக்கிறது. கடவுள் அருளால்த்தான் இவ்வளவு பெரிய வாய்ப்பு வந்தது. எனக்கு பிடித்த சித்தி விநாயகரை தினமும் வணங்குவேன். பேராசை கிடையாது. இப்போது இருப்பதே போதுமானது. இந்த மனநிலை இருத்தலே கடவுள் நேரில் வந்து தேவையானதெல்லாம் தருவார் என்றுள்ளார்.

## லட்சுமிமேனன் இனி அப்படி நடிக்கமாட்டாராம்

லட்சுமிமேனன் என்றாலே கிராமத்து வேடங்கள்தான் நினைவுக்கு வரும். அண்மையில் அஜித்தின் தங்கை வேடத்தில் வேதாளம் படத்திலும் அசத்தினார். யார் என்ன சொன்னார்களோ தெரியவில்லை, இனிமேல் அந்த இரண்டு வேடங்களிலும் நடிக்க மாட்டேன் என அறிவித்துள்ளார். வேதாளம் படத்தில் நடித்ததற்கு காரணம், நல்ல கதையம்சம் உள்ள வேடம் கிடைத்ததென்கிறார். தங்கை வேடத்தில் நடித்தும் பெயர் வாங்கலாமென்பதை நிரூபிக்கவே நடித்தேன். இனிமேல் தங்கை, கிராமத்து வேடங்களில் நடிக்க மாட்டேன். ஒரே மாதிரி வேடத்தில் நடிக்கிறேன் என்ற அபிப்பிராயம் வந்துவிடும் என்றார்.

## இறக்குமதி பேய்

டோலிவுட் ஹீரோயின் ஸ்ராவியாவை பிடித்து வந்து பேய் வேடத்தில் நடிக்க வைத்துள்ளனர். 'வெள்ளிக்கிழமை 13ம் திகதி' படத்திலேயே இந்த பேய்க்கூத்து. அந்த திகதியில் திருமணத்திற்கு தயாராக மணமகன் மேடையேறுகிறான். மணப்பெண் உருவத்தில் ரத்தவெறி பிடித்த பேய் வந்து நிற்கிறது. திருமணத்தை தடுக்க இன்னொரு பேய்க்கூட்டம் புறப்படுகிறது. இதன் முடிவு என்னவென்பதே கிளைமாக்ஸ்.



## 'லபக்'கிய லாவண்யா!

சுதீப் கிஷன் நடிப்பில் உருவாகவுள்ள புதிய படத்திலிருந்து டாப்ஸி கழற்றிவிடப்பட்டுள்ளார். தமிழில் வாய்ப்பில்லாமலிருந்த டாப்ஸிக்கு, வந்த வாய்ப்பும் கைதவறிய வருத்தத்தில் உள்ளார். டிசம்பரில் படப்பிடிப்பு நடக்கவிருந்தது, ஏதோ காரணத்தால் தள்ளிவைக்கப்பட்டு, பெப்ரவரியில் மீண்டும் ஆரம்பித்தது. ஆனால் இந்திப்படமொன்றில் நடிப்பதால் டாப்ஸியால் திகதிகளை ஒதுக்க முடியவில்லை. இதனையடுத்து டாப்ஸியை கழற்றிவிட்டு, லாவண்யா திரிபாதி தேர்வாகியுள்ளார்.



## நோ செல்பி

எல்லோரும் 'செல்பிஞ் செல்பி' என அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடிகை நந்திதாவோ தன்னுடன் யாராவது செல்பி எடுக்க விரும்பினால் மறுத்து விடுகிறார். செல்பி எனற பெயரில் ஆண்களில் உரசல், எல்லைமீறல் போன்றவற்றை தவிர்க்கவே செல்பியை தவிர்த்துள்ளாராம். எனினும் யாராவது புகைப்படம் எடுக்க விரும்பினால் வந்து தாராளமாக எடுக்கலாமென்றுள்ளார்.

## வரலட்சுமிக்கு வந்த வாய்ப்பு

'தாரை தப்பட்டை' படம் வரலட்சுமிக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துள்ளது. அவரது நடிப்பை பார்த்து மெய்மறந்த மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டி தனது புதிய படத்தில் அவரை நாயகியாக்கியுள்ளார். தமிழில் இரண்டு படங்களில் மட்டும் நடித்து மலையாள சூப்பர் ஸ்டார் ஜோடியாதெப்படி என்றுதான் மற்ற நாயகிகள் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்களாம்.

## கககபோ

'கககபோ" என்றொரு படம் வரப்போகிறது. கவிதாவும் கண்ணதாசனும் காதலிக்கப் போறாங்க என்பதுதான் அதன் விளக்கமாம். கேசவன், சாக்ஷி அகர்வால் நடித்துள்ளனர். முதல் காதலைப் போலவே முதல் முத்தமும் மறக்க முடியாதென்பதை வைத்து தயாராகியுள்ளதாம். படத்தில் காதல் ரசம் சொட்டுமென்கிறார் இயக்குனர். நாயகி சாக்ஷி அகர்வால் பாடல் காட்சியொன்றில் ஜான்சிராணி, கிளியோபெட்ரா முதல் நவீன 2015 ஆண்டு பெண் வரை 10 கெட்டப்புக்களில் அசத்தியுள்ளாராம்.

டூரிங் டாக்கீஸ்

## அனுஷ்காவின் மோதல்

ரம்யா கிருஷ்ணனின் கணவர் கிருஷ்ணவம்சி தெலுங்கில் பிரபல இயக்குனர். அவரது படத்தில் அனுஷ்கா ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். நாயகிக்கு முக்கியத்துவமுள்ள கதை. திடீரென அனுஷ்கா அகற்றப்பட்டு, சமந்தா நாயகியாக்கப்பட்டுள்ளார். இதுபற்றி வம்சி தரப்பிடம் விசாரித்தால், நாயகிக்கு முக்கியத்துவமுள்ள வேடங்களில் அனுஷ்கா தாராளமாக நடித்துவிட்டார். ஒரு வித்தியாசத்திற்காக சமந்தாவை மாற்றினோம் என்றுள்ளார்கள். என்னத்தை சொன்னாலும், இந்த விவகாரத்தால் அனுஷ்கா மிக சூடாக உள்ளார்.



# அழிந்துபோன ஆனந்தா வித்தியாலயம்



**ம.வித்தியானந்தநேசன்**
பழைய மாணவன்

**நா**ன் மாவட்ட புள்ளிவிபரவியலாளராக பணியாற்றுகின்றேன். 3 பல்கலைக்கழகங்களில் படித்து 5 பட்டங்களைப் பெற்றேன். 3 உயர்தர கணித நூல்களை வெளியிட்டுள்ளேன். எனக்கு ஆரம்பக்கல்வியை ஊட்டியது இந்தப்பாடசாலைதான். எமது கல்விக்கு வித்திட்டு எம்மை உயர வைத்த இந்தப் பாடசாலை மூடப்படுவதை கேள்விப்பட்டபோது இதயமே நொறுங்கிவிட்டது.






செல்வம்
selvam@deepam.lk

இயந்திரமயமாகி வரும் கல்வி. பிள்ளைகளின் கைகளிலிருந்த புத்தகங்கள் முதுகில் மூட்டைகளாகிய அவலத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். கல்வி பெரும் போட்டியாகி பிள்ளைகள் பெறும் பெருபேறு பெற்றவர்களின் சமூக அந்தஸ்த்தை தீர்மானிப்பதாக மாறிய பின்னர் பிள்ளைகள் புள்ளிகள் பெறும் இயந்திரங்களாகி விட்டனர். புள்ளிகள் பெறுவதொன்றே கல்வியின் பிரதான நோக்கமாகிவிட, கல்வி விற்பனைப்பொருளாகி விட்டது. அதன் விளைவுகளிலொன்றாக, நகர்ப்புறத்திலுள்ள பிரபல்யம்மிக்க பாடசாலைகளை நோக்கி மாணவர்களை முண்டியடிக்க வைத்துள்ளது. கிராமப்புற மாணவர்கள் நகர்ப்புறபாடசாலைகளிற்கு படையெடுக்க, கிராமப்புற பாடசாலைகள் 'ஈயோட்ட' ஆரம்பித்துள்ளன. மாணவர்கள் இல்லாதது கிராமப்புற பாடசாலைகளை வரிசையாக மூட வைத்துக் கொண்டிருக்கிறது.

மூடுவிழா நடந்து கொண்டிருக்கும் பாடசாலைகளின் வரிசையில் அண்மையில் இணைந்துள்ளது யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர் ஆனந்தா வித்தியாலயம். அரியாலை வடமேற்கில் ஜே/91 கிராம சேவகர் பிரிவில் ஆசீர்வாதம் வீதியில் அமைந்துள்ள இந்தப்பாடசாலை , இவ்வாண்டின் முதலாம் தவணையின் முதல் வாரத்தில் மூடப்பட்டுள்ளது. .

மூடப்பட்ட பாடசலையில் கல்வியத்திணைக்களத்தின் 'பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தல் மற்றும் கண்காணிப்பு முறைகாண் ஆயம்' என்றொரு அலுவலகம் திறக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கிறது. பாடசாலை மூடப்பட்டபோது அங்கு கல்விகற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் வேறொரு பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்த கிராம மக்களின் உழைப்பால் அந்தப்பாடசாலை உருவானது. பாடசாலை இழுத்து மூடப்பட்டதை அந்த கிராமமக்கள் இன்னும் ஜீரணிக்க முடியாதவர்களாக உள்ளனர்.

முன்னர் ஒருகாலத்தில் இந்தப்பாடசாலையும் நன்றாக இயங்கிக் கொண்டுதான் இருந்துள்ளது. கல்விப்பொதுதராதர சாதாரணதரம் வரை வகுப்புக்கள் நடந்துள்ளன. எனினும் அண்மைக்காலமாக மாணவர் தொகை வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. முதல் வீழ்ச்சி, எட்டாம் வகுப்பு வரையான பாடசாலையாக மாறியது. நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் படையெடுக்க ஆரம்பித்தது இன்னும் தீவிரம் பெற்றதை தொடர்ந்து, சில வருடங்களிலேயே ஐந்தாம் வகுப்பு வரையான பாடசாலையாகியது.

இறுதியில் இழுத்தே மூடப்பட்டுள்ளது. இழுத்து மூடப்பட்டபோது அந்தப்பாடசாலையில் கல்வி கற்றது வெறும் பதின்னான்கு மாணவர்கள்தான். பாடசாலை அமைந்துள்ள கிராமத்தில் ஐநூறுவரையான குடும்பங்கள் வசித்தாலும், பாடசாலையில் சேர மாணவர்கள் தயக்கம் காட்டியது ஏன்?

பாடசாலை மூடப்பட்டதற்கு மாணவர்கள் தொகை போதாதென கல்வித்திணைக்களத் தரப்பால் கூற, ஊர் மக்கள் வேறு விதமாக கூறுகிறார்கள். பாடசாலை தரமாக இயங்கினால் ஏன் நாங்கள் வேறிடத்திற்கு செல்கிறோம் என்பது அவர்கள் கேள்வி. பாடசாலையின் பௌதீக வளங்கள், தேவையான ஆசிரியர் நியமனம் என்பவற்றை செய்தால் ஏன் நகர்ப்புறம் நோக்கி செல்கிறோம் என்பது அவர்கள் கேள்வி.

இந்தப்பாடசாலையை விட குறைந்த அல்லது சற்று அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் வடமாகாணத்தில் மேலும் பல இருக்கும்போது, இந்தப்பாடசாலையை இழுத்து மூட என்ன காரணம் என்பதும் ஊர்மக்களின் கொதிப்பு.

நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி கிராம மாணவர்கள் படையெடுப்பதை தவிர்க்க, இம்முறை முதலாம் தவணை மாணவர் சேர்க்கையில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டதாக வடக்கு கல்வியமைச்சு வட்டாரங்கள் கூறின. நகர்ப்புற, பிரபல்ய பாடசாலைகளில் மாணவர்களை உள்வாங்கும் விண்ணப்ப பரிசீலனையில் கல்வித்திணைக்கள உயரதிகாரிகள் நேரில் சென்று, தூர இடத்திலிருந்து வருபவர்களின் விண்ணப்பங்களை ஏற்க மறுத்ததாகவும், அருகிலுள்ள பாடசாலைகளிற்கு செல்ல அறிவுறுத்தியதாகவும் கூறப்பட்டது. என்றாலும், ஐநூறு குடும்பங்கள் சூழவுள்ள பாடசாலை இழுத்து மூடப்பட்டதைதான் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்தப்பாடசாலையை மீள உருவாக்க வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்து அந்த கிராமத்தவர்கள் ஒன்றுகூடி குழுவொன்றை அமைத்துள்ளனர். அந்த குழுவின் ஏற்பாட்டில் கடந்த 29.01.2016 அன்று பாடசாலையின் முன்பாக கவனயீர்ப்பு போராட்ட மொன்றை நடத்தியிருந்தனர். பாடசாலையை மீள ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்கு கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக்கடிதத்தில் வலியுறுத்தப் பட்டுள்ள கோரிக்கைகள்

1. அருட்சகோதரி ஒருவரை அதிபராக நியமித்தல்
2. மக்கள் அடையாளம் காட்டும் ஆசிரியர் களை நியமித்தல்
3. பாடசாலையை சுற்றி மதில் கட்டுதல்
4. பழைய கட்டிடங்களை அகற்றி புதிய இரண்டு மாடி கட்டிடமொன்று அமைத்தல்
5. பாடசாலையில் இயங்கும் திணைக்கள

**அலுவலகங்களை அகற்றல்.**

கல்வியின் போட்டித்தன்மை, நகர்ப்புற பாடசாலைகளின் அதீத வளர்ச்சியென்பன கிராமப்புற பாடசாலைகளை கபளீகரம் செய்வதை தடுப்பது மிகச்சிரமமான தாகத்தான் இருக்கப் போகிறது இதுவரை மூடப்பட்ட பாடசாலைகள் மீளத்திறக் கப்படுவ தென்பது கனவாகத்தான் இருக்கும். மூடப்படும் தறுவாயிலிருக்கும் பாடசாலைகளையாவது காப்பாற்றுவதென்றால் அதிகாரிகளும் அதிக அக்கறையெடுக்க வேண்டும். பெற்றோரும் நகர்ப்புற மயக்கங்களிலிருந்து விடுபட வேண்டும்.

**அ.யோகராஜா**
பழைய மாணவன்

**நா**ன் மருத்துவராக காரணமானஇந்தப் பாடசாலையை மூடுவது, என்னை நானே கொலை செய்வதற்கு சமனாகும். பின்தங்கிய கிராமத்தில் உருவான இந்தப் பாடசாலைக்கு புத்தொளி கொடுக்க நாங்கள் முன்வரவில்லை என்றால் நான் படித்த மருத்துவம் உயிர்பெறாது போய்விடும். எமது மூச்சான பாடசாலையை மூடிவிட்டு, படித்த ஒருவர் இந்தப் பிரதேசத்தில் இருக்கிறார் என்று எப்படி வெளிப்படையாக சொல்ல முடியும்.



மாந்தை கிழக்கு அலிகார் MMV - 3 மாணவர்களுடன் இயங்குகிறது
காரைநகர் பாலாவோடை HTM - 9 மாணவர்கள்
காரைநகர் அஜிலி சிவனாநோதய வித்தியாலயம் - 17 மாணவர்கள்
அரியாலை கிழக்கு GTMS - 17 மாணவர்கள்
பளை அல்லிப்பளை CCTMS - 16 மாணவர்கள்
பூநகரி சாமிப்புலம் GTMS - 13 மாணவர்கள்
மாந்தைமேற்கு ஆத்திமோட்டை GTMS - 6 மாணவர்கள்
மாந்தைமேற்கு பரப்புக்கடந்தான் GTMS - 13 மாணவர்கள்
மாந்தைமேற்கு பாலக்குழி RCTMS - 15 மாணவர்கள்

# வைத்தியரிடம் கேளுங்கள்

**பெயர் குறிப்பிடவில்லலு ஆண் (28)**
**மண்டைதீவு**

**கேள்வி :** எனது உடல் வியர்வை மணப்பதாக நண்பர்கள் சொல் கிறார்கள். இதனால் அலுவலகத்தில் நண்பர்கள் அருகில்செல்ல சங்கடமாக இருக்கிறது. வாசனை சோப் உபயோகித்தேன். வாசனைத் திரவியம் பாவித்தேன். ஆயினும் சரியான தீர்வில்லை. என்ன செய்ய லாம்?

**பதில்:** இயற்கையாக வியர்வை மணப்பதில்லை. ஆனால் சுரக்கும் அந்த வியர்வையில் பக்றீரியாக் கிருமிகள் பெருகும்போதே மணம் ஏற்படுகிறது. கோரைக்கிழங்கு, மரமஞ்சள், பாசிப்பயறு மூன்றை யும்பொடியாக்கிவைத்துக்கொண்டு நீரில் குழைத்து பூசிக்குளித் துவாருங்கள். வியர்வை நாற்றம் அகன்றுவிடும். அத்துடன் தினமும் அதிகநீர் அருந்துங்கள் காய்கறிகள், பழவகைகள் அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.





**ஆறுமுகம் (48)**
**அராலி**

**கேள்வி:** எனது பாதத்திலும், விரல் அடியிலும் வெள்ளையாய் தடித்து படினமாகி முளை போல் வளர்ந்திருக்கிறது. மிதிக்கும் போது வலி ஏற்படுகிறது. எதிலாவது இடித்துவிட்டால் பொறுக்கமுடி யாத அளவிற்கு வலியினை உணர்கிறேன். மருந்து சொல்லுங்கள்.

**பதில்:** இதை கால் ஆணி என்பார்கள். வசம்பு, மருதோன்றி, துத்தம் பத்து கிறாம் அளவில் எடுத்து தூள்செய்து வைத்துக் கட்டிவர குணமாகும்

**சாந்தனா (21)**
**அராலி**

**கேள்வி:** எனது குழந்தை பிறந்து மூன்றுமாதம். வயிறூதி முறுக்கி அழுகிறது. சிவப்புநிற சிறு கொப்பளங்கள் தோன்றி இருக்கிறது. என்னசெய்யலாம்?

**பதில்:** இது குழந்தைகளுக்கு ஏற்படும் கிரந்தி பரப்பன் நோயாக இருக்கலாம். கிரந்தியெண்ணெய் வைத்து கிரந்திக் அகோரோசனை மாத்திரை கொடுக்கக் குணமாகும். குழந்தை என்பதால் வைத்தியரிடம் காட்டி நோயை நிர்ணயம் செய்வதே சிறந்தது.

**நிக்சன் (40)**
**பருத்தித்துறை**

**கேள்வி:** மரமஞ்சள் ஏற்புவலி ஏற்படாதிருப்பதற்காக கிராமங் களில் பயன்படுத்துவார்கள். நீரிழி வுற்கும்நல்லது என தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கூறினார்கள். நீரிழிவு நோய்க்காரர் இதை எவ்வாறு பயன் படுத்தலாம்?

**பதில் :** மரமஞ்சள் மர இனத்தைச் சேர்ந்ததாகும். இம்மரத்தின் பட்டை பருமனாக மஞ்சள் நிறத்தில் இருக்கும். இது புண்ணைக் குணமாக்குகிறது. நீரிழிவு, ஏற்புவலி என்பன ஏற்படாமல் தடுக்கிறது. மர மஞ்சளின் பட்டையை எடுத்து அரைத்து நெய்சேர்த்து புண்களில் பூசி வர குணமாகும்.

ஏற்புவலித்தடையாக இதன் கசாயத்தை பருகலாம். நீரிழிவு இருப்பவர்கள் மரமஞ்ள், திப்பிலி, நெல்லிவற்றல் மூன்றையும் பொடி செய்து கலந்து வைத்துக்கொண்டு ஒருதேக்கரண்டி 200 மில்லி சுடுநீரிலே கலந்து தேனிர்போல அருந்தி வர இரத்தத்தில் சக்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

இதை விட காய்ச்சல் தோல் சார்ந்த நோய்களிலும் இது பயன்படுத்தப் படுகிறது



திருமணமாகி 6 வருடங்கள். இன்னும் குழந்தைகள் இல்லை. வைத்திய பரிசோதனையில் கருமுட்டை உருவாவதில் பிரச்சினை உள்ளது என்கிறார்கள். இதற்கு சித்தமருந்துகள் இருக்கிறதா?

**மணிமாலா (38)**
**மருதனார் மடம்.**

**கேள்வி:** திருமணமாகி 6 வருடங்கள். இன்னும் குழந்தைகள் இல்லை. வைத்தியபரிசோதனையில் கருமுட்டை உருவாவதில் பிரச்சினை உள்ளது என்கிறார்கள். இதற்கு சித்தமருந்துகள் இருக் கிறதா?

**பதில்:** நிறைய மருந்துகள் இருக்கிறது. ஆனால் நோயாளியின் உடல் நிலைக்கேற்ப நாடிப்பரி சோதனை போன்றவற்றின் பின் தான் சரியான மருந்தை தீர்மானிக் கமுடியும். அசோகாரிஸ்டம் போன்ற மருந்துகள் கருப்பையை பலப்படுத்தி இயல்பான நிலைக் குவர உதவுகின்றன.





**எஸ்.தில்லை நாதர் (50)**
**இராசாவின் தோட்டம்**

**கேள்வி:** தேனீர், கோப்பி போன்ற வற்றிலுள்ள சில பொருட்கள் உடநலத்திற்கு நல்லதில்லை என்கி றார்கள். தேனீர் எனது நீண்டகால பழக்கம் விடமுடியவில்லை. ஆலோசனை கூறுவீர்களா?

**பதில்:** தேனீர் பழக்கத்தைவிட முடியாவிட்டாலும் பால்சேர்ப் பதை தவிர்க்கலாம். மேலும் வெள் ளைச் சீனிக்கு பதிலாக பனை வெல்லத்தைப் பன்படுத்துங்கள். தேயிலையை விட கிறீன் ரீ நல்லது. அதைப் பயன் படுத்தலாம்.

**எம் மயில்வாகனம் (55)**
**கோப்பாய்**

**கேள்வி:** கைகால் உளைவு மூட்டு வலியால் அவதிப்படுகிறேன். தற்போது ஆயர்வேத சிகிச்சை செய்கிறேன். யோகராஜ குக்குளு தந்தார்கள். உணவு விடயத்தில் நான் சேர்க்க வேண்டிய உணவுகள் என்ன? எதை தவிர்க்க வேண்டும்?

**பதில்:** ஆயர்வேத வைத்தியம் செய்வதாக குறிப்பிட்டுள்ளீர்கள். கேள்வியை உங்கள் வைத்தியரிடமே கேட்கலாம். இருந்தாலும் பிறருக்கும் பயனுண்டு என்பதால் தருகிறேன். பால், தயிர், கிழங்கு வகைகள் பழைய உணவுகளை தவிருங்கள். இஞ்சி உள்ளி சின்னவெங்காயம் மிளகு எனபவற்றை உணவிலே சேர்த்துக்கொள்ளுங்கள். அரிசி சிறுதானியங்கள் காய்கறிகள் கீரைகள் சிறிய மீன்கள் உண்ணலாம்.

**கண்ணன் (19)**
**மட்டுவில்**

**கேள்வி:** எனக்கு பீனிசம் இருக்கிறது. இதனால் மூக்கடைப்பும் தலைவலியும் ஏற்படுகிறது. தலைவலிக்கு மேற்பூச்சு மருந்து ஏதாவது பாவிக்கலாமா?

**பதில் :** தமிழ் மருந்துக் கடைகளில் நீர்க்கோவைமாத்திரை என்று ஒரு மருந்து கிடைக்கிறது. அதை வாங்கி எலுமிச்சம் பழச்சாற்றிலே உரைத்து நெற்றியிலே பற்றாக போட பீனிசத்தால் உண்டான தலைவலி நீங்கும்.

**கே கைலைநாதன் (54)**
**கைதடி, நுணாவில்**

**கேள்வி:** இந்தியாவிலே தரமான சித்த மருந்துகள் இருப்பதாக அறிகிறோம். இங்குள்ள வைத்தி யர்களைகேட்டால்அதைஇலகுவில் பெறமுடிவதில்லை என்கிறார்கள். கிடைத்தாலும் விலை மிக அதிகமாக இருப்பதால் தொடர்ச்சியாக எடுக்க முடியாதுள்ளதாகச் சொல்கி றார்கள். ஏன் அவ்வாறு அமைகிறது? அங்கு உற்பத்தியாகும் அழகுக் கிறீம்கள், சோப்புக்கள் என்பன ஓரளவு கிடைக்கிறதுதானே?

**பதில்:** இங்குள்ள சித்தமருத்து வர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை யொன்றை குறிப்பிட்டுள் ளீர்கள். இலங்கையில் சுதேச மருந்துற்பத்தியை பாதிக்கும் என்பதற்காக இந்த மருந்துகளின் இறக்குமதி தீர்வையை அரசாங்கம் அதிகரித்திருக்கிறதென அறிகி றேன்.

ஆயுர்வேத மருந்துகள் இங்கு கிடைக்கின்றதென்றாலும் சித்த மருந்துகள் இந்தியாவில் இருந்து தான் பெற வேண்டும். எமது மாகாணசபை அமைச்சுப் பொறுப் பில் உள்ளவர்கள் இதில் தலை யிட்டு இந்திய மருந்துகளை பெற்று தந்தால் எல்லோரும் பயன் பெறு வார்கள்.

# நூற்றைம்பது கிலோமீற்றர் தேடி வந்த நாய்

சுட்டு
chuddu.deepam@gmail.com









யுத்தத்தில் இடம்பெயர்ந்த காணாமல் போய் மீண்டும் சந்தித்த உறவுகளை உறவுகளின் உணர்ச்சிபூர்வ தருணங்களை.. இப்படி பலபல யுத்த அவலக்கதைகளை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் மனிதர்களிற்கும் விலங்குகளிற்குமிடையிலான உறவுப்பிணைப்பு... யுத்தம் காவு கொண்ட உறவுகளின் கதை... மீளிணைந்த அற்புத தருணங்கள் பற்றிய கதைகள் எழுத்தில் வருவதில்லை. இன்னும் இயற்கை மிஞ்சிக்கிடக்கும் காட்டோர கிராமங்களின் மனிதர்களுடன் மட்டும் வாழும் கதைகளில் ஒன்றை எழுத்தில் கொண்டு வருகிறோம்.

முல்லைத்தீவின் நட்டாங்கண்டல் கிராமத்திலிருக்கிறார் நியாந்தன். நியாந்தன் வீட்டில் எல்லோரையும் கட்டிப்போட்டு வைத்திருக்கிறது ராணி. நியாந்தன் வீட்டில் எல்லோருக்குமே ராணி என்றால் உயிர். சுருக்கமாகச் சொன்னால் நியாந்தனின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர்தான் ராணியென்ற நாய்.

சின்னக்குட்டியாக நியாந்தன் குடும்பத்துடன் இணைந்து, பிறந்து ஒருவருடத்தில் ஊர்ஊராக அலைந்து, குடும்பத்தை விட்டுப் பிரிந்து, மீண்டும் இணைந்த கதையிது.

2006 இல் நியாந்தனின் அப்பா ஏதோ அலுவலாகச் சென்ற இடத்தில் ஒரு குட்டி நாயை சந்தித்துள்ளார். கால்களிற்கிடையில் வந்து குழைந்து அடைக்கலம் கேட்டுள்ளது. தூக்கிப் பார்த்திருக்கிறார். பெண் நாய். இரண்டாவது விடயத்தை யோசிக்காமல் வீட்டுக்கு கொண்டு சென்றுவிட்டார்.

அடைக்கலம் கொடுத்த வீட்டில் அந்த நாய்க்குட்டிக்கு பெயர் ராணி. அப்பொழுது சிறுவனாக இருந்த நியாந்தனுடன் ராணி அன்னியோன்யமாக இருந்தது. நியாந்தனிற்காக பாடசாலை வாயிலில் ராணி காத்திருக்கும் அளவு பாசப்பிணைப்பு கொண்டது.

காட்டுடன் நெருக்கமான பிணைப்பை கொண்ட கிராமம் அது. எல்லாக் குடும்பத்தின் வாழ்வுடனும் பின்னணிப்பிணைந்திருந்தது காடு. அந்த மனிதர்களின் வாழ்வில் நாய் தவிர்க்கவியலாத அங்கம். காவல் காக்க, பட்டி மேய்க்க, வேட்டையாட என நாய்கள் குடும்பங்களின் அங்கத்தவர்களாகவே ஆகிவிடும்.

அந்தச்சமயத்தில்தான் யுத்தம் வன்னிக்குள் புகுந்தது. மன்னாரிலிருந்து தொடங்கிய இடப்பெயர்வு ஒவ்வொரு கிராமங்களையும் முள்ளிவாய்க்கால் நோக்கி துரத்த ஆரம்பித்தது. நட்டாங்கண்டலிலிருந்து நியாந்தன் குடும்பம் ஓட ஆரம்பித்தபோது ராணியும் அவர்களுடன் ஓட ஆரம்பித்தது. ஒவ்வொரு கிராமத்திலும் தரப்பாள் அடித்து தங்கியபோது ராணியும் ஓரமாக உட்கார்ந்திருந்தது. நாளுக்கொரு ஊராக இடம்பெயர்ந்து புதுமாத்தளன் வரை ராணி அவர்களுடன் சென்றது.

ஒவ்வொரு அங்குலமும் எறிகணை வெடிக்கும், ஒவ்வொரு கணமும் உயிர்கள் பறிக்கப்பட்ட புதுமாத்தளனில் 2008 இன் ஏதோ ஒரு அனர்த்தப் பொழுதில் நியாந்தன் குடும்பமும் ராணியும் பிரிந்து விட்டனர். ராணிக்கு ஏதோ ஆகிவிட்டதென எல்லோரும் நினைத்தனர். ஆரம்பத்தில் நிறைய வருத்தமிருந்தாலும், நாளாகநாளாக ராணி நினைவிலிருந்து தவறிச் சென்றுவிட்டது.

அகதி முகாம் வாழ்வெல்லாம் துடித்து நியாந்தன் குடும்பம் நட்டாங்கண்டலில் மீள்குடியேறியது. தமது வாழ்வாதாரத் தொழிலான வேளாண்மையில் மும்முரமாக இறங்கினார்கள். 2011 இன் இரவொன்றில் வேளாண்மைக்கு நீர் பாய்ச்சி, காவல் முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வீதியின் ஒரு பக்கம் காடு. காட்டுப்பக்கத்தில் ஏதோ உருவம் அசைந்தது. நின்று நிதானிப்பதற்குள், எங்கிருந்தோ திடீரென பாய்ந்து வந்த நாயொன்று அந்த உருவத்தை ஆக்ரோசமாக குலைத்து கலைத்தது. வயல்காவலிற்கு சென்ற பலர் மறுநாள் பேசிக்கொண்டார்கள், அந்தப்பாதையில் கரடி உலாவியதாக.



அடையாளமே தெரியாத நாயொன்று அன்றிரவு தனது உயிரை காப்பாற்றியதாக நியாந்தன் நம்புகிறான்.

அடுத்த சில நாட்களின் பின்னர் ஒரு அதிகாலை. வீட்டுக்கதவை நியாந்தனின் தாய் திறந்தார். நாயொன்று படுத்திருந்தது. அதன் ஏழு குட்டிகள் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தன.

தாயார் பயந்துபோய் நித்திரையிலிருந்த நியாந்தனை எழுப்பிவிட்டார். தூக்க கலக்கத்தில் வந்து பார்த்தான் நியாந்தன். நாயும் பார்த்தது. சில விநாடிகளில் மனத்தரையை பிளந்து கொண்டு முளைத்தது அந்த பழைய உறவு.

'ராணியம்மா' என அவன் கூப்பிட, பாய்ந்து வந்து தாவியேறியது நாய்.

இன்றுவரை அந்த குடும்பத்தின் தவிர்க்க முடியாத உறவாக நிலைத்துவிட்டது ராணி. எல்லோருடமும் எதையாவது பறித்த யுத்தம், ராணியிடம் பறித்தது இரண்டு காதுகளையும்.

மூன்று வருடங்களின் முன்னர், வீட்டிலிருந்து நூற்றைம்பது கிலோமீற்றர் தொலைவில் காணாமல் போன நாய், அகோர யுத்தத்திற்குள்ளால், முள்வேலிகளிற்குள்ளால் தப்பி மீண்டும் வீடு தேடி வந்த நெகிழ்ச்சி கரையாமல் இன்றுமிருக்கிறார்கள் நியாந்தன் குடும்பம்.





வடமாகாண போக்குவரத்து அமைச்சினால் அமைக்கப்பட்ட பேரூந்து நிலையம் முருங்கன் நகரில் கடந்த 18ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க அப்போஸ்தலிக்க பரிபாலகர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் தேங்காய் எண்ணெய் கைத்தொழில்




ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263




தேங்காயினுள் காணப்படும் வெள்ளை நிற பருப்பு அதன் வெளிப்புறத்தில் காணப்படும் கபில நிற வித்துறையினை இயந்திரங்களின் மூலம் அதிக அமுக்கத்தின் கீழ் அல்லது இரசாயன முறையில் கரைத்தெடுப்பதன் மூலம் தேங்காய் எண்ணெய் பெறப்படுகின்றது.

இலங்கையில் தேங்காய் எண்ணெயானது கொப்பறாவை சிறுதுண்டுகளாக்கி இயந்திரங்களின் மூலம் அழுத்துவதன் மூலம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்ய கிட்டத்தட்ட 1.6 மெற்றிக்தொன் கொப்பறா தேவைப்படுகின்றது. இது 8800 தேங்காய்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் கெப்பறாவிற்கு சமமாகும்.

இலங்கையில் மத்திய தரத்திலான மற்றும் பாரிய அளவிலான எண்ணெய் கைத்தொழில் நிலையங்கள் 4050 வரையிலும், சிறிய அளவிலான தேங்காய்க் கைத்தொழில் நிலையங்கள் 400500 வரை காணப்படுகின்றன.

**தேங்காய் எண்ணெய் வகைப்படுத்தல்.**

*1)* **உணவிற்காக பயன்படுத்தப்படும் வகைகள்.** (Edible type)

- வெள்ளைத் தேங்காய் எண்ணெய்.(White coconut oil)
  இது தரமுயர்ந்த கொப்பறாவில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் தேங்காய் எண்ணெய் ஆகும்.
- சுத்திகரிக்கப்பட்ட, கலவை செய்யப்பட்ட மணமகற்றப்பட்ட தேங்காய் எண்ணெய். (Refined bleached and deodorized coconut oil)
  தொழில்நுட்ப ரீதியில் வெள்ளைத் தேங்காய் எண்ணெய் தயாரிக்கப்படும் முறையில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் தரம் குறைந்த கொப்பறா பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்படுகின்றது. இதன் காரணமாக இத் தேங்காய் எண்ணெயில் சுயாதீனமான கொழுப்பமிலங்கள் அதிகளவில் காணப்படுகின்றது. அதிலுள்ள மேலதிக அமிலங்கள் அகற்றப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றது. இதன் சுத்திகரிப்பாக ஏவப்பட்ட காபன் அல்லது டிக்யூலஸ் ஏர்ன எனப்படும் சிலிக்கேன் பயன்படுத்தப்படுகின்றது.
- தேங்காய் வித்துறை தேங்காய் எண்ணெய் (paring coconut oil)
  உலர்த்திய தேங்காய் தயாரிப்பின் போது பெறப்படும் வித்துறையிலிருந்து இது பெறப்படும்.
- கன்னித் தேங்காய் எண்ணெய் (virgin coconut oil)
  அதி சுகாதார முறையில் நன்றாக முதிர்ந்த போசாக்குப் போன்றவை அதே நிலையிலிருக்குமாறு குறைந்த வெப்பநிலையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் .தேங்காய் எண்ணெயானது கன்னித் தேங்காய் எண்ணெய் எனப்படும். தற்போது அதி நவீன தொழில்நுட்பத்தில் குளிர் நிலையில் அமுக்கம் பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் பெறப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. (cool press) அம் முறையின் போது வெப்பநிலையானது 600இற்கு மேற்படாது பேணப்படும்.

*2)* **உணவிற்காக பயன்படுத்தப்படாத தேங்காய் எண்ணெய்.** (Non edible coconut oil)

- கைத்தொழில் தொடர்பான தேங்காய் எண்ணெய். (Industrial coconut oil)
  வரட்சியான காலங்களில் கீழே விழும் தேங்காய்கள், மழைக்கு நனைந்த தேங்காய் மற்றும் தேங்காய் பறிக்கும் போது ஏற்படும் தவறுகள் காரணமாக பறிக்கப்படும் இளம் தேங்காய்கள் போன்றவற்றில் இருந்து பெறப்படும் கொப்பறா தரம் குறைந்ததாகவும் பங்கசு கொண்டதாகவும் காணப்படும். இதிலிருந்து பெறப்படும் தேங்காய்கள் எண்ணெய் குறைந்த தரம் உடையதாகக் காணப்படும். இதில் அதிகளவு கொழுப்பமிலம் காணப்படும்.
- கழிவுத் தேங்காய் எண்ணெய். (Siudge oil)
  உலர்த்திய தேங்காய்த் தயாரிப்பின் போது சேகரிக்கப்படும் தேங்காய் நீர் மற்றும் கைத்தொழில்சாலையில் பெறப்படும் கழிவு நீர் போன்றவற்றை சீமெந்தினால் ஆன தாங்கிகளில் சேகரிக்கப்பட்டு இப்படியான பல தாங்கிகளின் ஊடாக செலுத்தப்பட்டு அதன் பின்பு நீருக்கு மேலாகக்காணப்படும்எண்ணெய்படலம் வேறாக்கப்பட்டு சூடாக்குவதன் மூலம் கடுமையான நிறம் உள்ள கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தேங்காய் எண்ணெய் பெறப்படும். இப்படியாகப் பெறப்படும் தரம் குறைந்த தேங்காய் எண்ணெய் சோப் தயாரிப்பில் பயன்படும்.

**தோங்காய் எண்ணெயின் உள்ளடக்கம்.**

காபோவைதரேற்று (carbohydrate) - சிறிதளவு
புரதம் (protein) - சிறிதளவு
கொழுப்பு (fat) - 99.9
நார்ச்சத்து (fibre) - சிறிதளவு

தேங்காய்எண்ணெயின்தர நிர்ணயமானது இலங்கையின் தர நிர்ணய நிறுவனத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது.

உணவுக்காகப் பாவிக்கப்படும், கைத்தொழில் சம்பந்தமான தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிந்து கொள்ளலாம்.

| | உணவுக்காகப் பாவிக்கப்படும் | உணவுக்காகப் பாவிக்கப்படாதவை |
|---|---|---|
| நிறம் லொவிபோன்ட வர்ணமானியில் 25mm (y+5r) (மஞ்சள்+சிவப்பு) | 1 தொடக்கம் 5 வரை | 5 தொடக்கம் 11 வரை |
| சுயாதீனக் கொழுப்பு அமிலங்களின் விகிதாசாரம் (லோரிக்கமிலம்) | 0.1 தொடக்கம் 0.8 வரை | 0.8 தொடக்கம் 1.5 வரை |
| அயடீன் அளவு | 7.5 தொடக்கம் 11 வரை | 7.5 தொடக்கம் 18 வரை. |

**சுயாதீனக் கொழுப்பமிலம்.** (Free fatty acid)

தேங்காய் எண்ணெய் விரைவாக சிக்கல் மணம் அடையும், அதிகளவு கொழுப்பமிலம் காணப்படுகின்றது. சிக்கல் மணமானது ஒருவகையான தேங்காய் எண்ணெய்க்கு உரித்தான மணமாகும்.

**அயடீன் அளவு.**

தேங்காய் எண்ணெய் ஒரு மெற்றிக் தொன்னின் தேசிய விலை 85000 ரூபா ஆகும். கடந்த காலங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும். தேங்காய் எண்ணெயில் 30 வீதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெயில் 98 சதவீதமானது உள்நாட்டிலேயே பாவிக்கப்படுகின்றது.

தற்போது ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் விலை 1 தொன்னிற்கு 1400 அமெரிக்கடொலர் ஆகும். இலங்கையிலிருந்து முக்கியமாக வங்காள தேசம், பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராட்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்றவற்றிற்கு தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தேங்காய் எண்ணெயை பெருமளவு சேமித்து வைக்கும் பொருட்டு இலங்கை துறைமுகத்தில் 17000 மெற்றிக்தொன் வரை கொள்ளளவு உள்ள தாங்கிகள் காணப்படுகின்றது. இத் தாங்கிகளில் சேகரித்த தேங்காய் எண்ணெய் கடந்த காலங்களில் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**தேங்காய் எண்ணெயின் உபயோகம்.**

- உணவு தயாரிப்பு.
- சுகாதாரமுறையான திரவங்கள் தயாரிப்பு.
- சோப்புத் தயாரிப்பு.
- கிளிசரீன் தயாரிப்பு.
- ஆயுள்வேத மருந்து தயாரிப்பு.
- மருந்தாகப் பயன்படும்.

உணவு விஞ்ஞானிகளின் கருத்துப்படி தேங்காய் எண்ணெயானது அதிகூடிய ஆரோக்கியத்தை தரக் கூடியது. அத்துடன் தரமான தேங்காய் எண்ணெய் பாவிப்பதன் மூலம் உடலில் உருவாக்கப்படும் கொலஸ்ரோலின் அளவு குறைக்கப்படும்.

தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதற்காக தேங்காய் எண்ணெய் கைத்தொழிலாளர்களை தரமான தேங்காய் எண்ணெய் தயாரிப்பை ஊக்குவிப்பதற்காக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றது.





சுதுமலை நாவலர் பாலர் பாசாலையின் புதிய மாணவர்களிற்கான கால்கோள் விழா கடந்த 14ம் திகதி நடந்தது.



திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி






# முகத்தில் முகம் பார்க்கலாம்

**பருக்கள் போக :**

இரத்த சந்தனப் பௌடர் : 1 டிஸ்பூன்
சந்தனத் தூள் : 1 டிஸ்பூன்
வேப்பிலை பவுடர் : 1 டிஸ்பூன்
முல்தானி மெட்டி :3 டிஸ்பூன்
பன்னீர் தேவைக்கேற்ப

கலந்து பரு இருக்கும் இடத்தில் மட்டும் பூசி 10 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும்.

வேப்பிலை பொடி பப்பாளி பொடி மற்றும் துளசிப் பொடி மூன்றையும் கலந்து பருக்களின் மீது தடவி வர அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

சந்தனப் பொடி : 1டிஸ்பூன்
நெல்லிக்காய் பொடி : 1டிஸ்பூன்

இவற்றை சிறிதளவு நீரில் குழைத்து பருக்களின் மீது தடவவும். பத்து நிமிடங்கள் ஊறியதும் ஒரு டிஸ்பூன் வேப்பிலை பொடி போட்டுக் கொதிக்க வைத்த நீரால் முகம் கழுவவும்.

புதினா சாறு : 5துளிகள்.
துளசி பொடி : 1 டிஸ்பூன்
முல்தானி மெட்டி : 2டிஸ்பூன்

கலந்து பருக்களின் மேல் தடவவும். 10 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி பின் குளிர்ந்த நீரில் கழுவினால் பருக்கள் மறையும்.

கடலை மா : 1 டிஸ்பூன்
கஸ்தூரி மஞ்சள் : 1 டிஸ்பூன்
எலுமிச்சை சாறு : 3 சொட்டு

கலந்து பரு உள்ள இடத்தில் தடவி 1 மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும்.

வேப்பிலை பொடி துளசிப் பொடி சமமாக எடுத்துக் கொண்டு தண்ணீரில் கலந்து பருக்கள் மீது தடவி வந்தால் குணம் தெரியும்.

பப்பாளி பொடி : 1 டிஸ்பூன்
முல்தானி மெட்டி : 1 டிஸ்பூன்

இரண்டையும் காய்ச்சாத பாலில் குழைத்து பருக்களின் மேல் தடவவும். லேசாகக் காய்ந்ததும் மிக மென்மையான மசாஜ் செய்து கழுவவும். பின் சுத்தமான டவலால் முகத்தை ஒற்றி எடுக்கவும். டவலில் ஒரு பக்கத்தால் முகத்தின் ஒரு பக்கம் மட்டுமே ஒற்றி எடுக்க வேண்டும்.

துளசிப் பொடி : 1டிஸ்பூன்
வேப்பிலை பொடி : 1டிஸ்பூன்
எலுமிச்சை சாறு : 5 சொட்டு

இவை கலந்து பருக்களின் மீது தடவி வரலாம். பரு குணமாகி பரு ஏற்படுத்திய தழும்பையும் கரும்புள்ளிகளையும் கூட போக்கும்.

பருக்கள் பொதுவாக எண்ணெய் பசை சருமத்தில் தான் அதிகமாக வரும். பரம்பரை காரணமாகவும் ஓமோன் கோளாறுகளாலும் சத்தான உணவு எடுத்து கொள்ளாமையாலும் வரும். காய்கறி பழ வகைகள் நீர் அதிகமாக உட் கொள்ளுங்கள்.

எண்ணெய் கொழுப்பு மசாலாக்களை தவிருங்கள்.

**சரும சுருக்கங்கள் மறைய**

பாதாம் எண்ணெய் : 1 டிஸ்பூன்
மில்க் கிரீம் : 1டிஸ் பூன்

கலந்து முகத்தில் பூசி கீழிருந்து மேலாக மசாஜ் செய்யவும். (5இலிருந்து 10 நிமிடங்கள் வரை) பின் அரைமணி நேரம் கழித்து கழுவவும்.

சோப்பிற்குப் பதிலாக பச்சைப் பயறு மாவு போட்டு முகத்தை கழுவலாம். (கடலை மா சருமத்தை உலர்ந்ததாக்கி விடும்.)

ஓரளவு வயதானவர்கள் அழகு நிலையம் சென்று அவ்வப்போது பேஷியல் செய்யலாம்.

கற்றாலை பொடி
ஒரேஞ் பழத் தோல் பொடி
ரோஜாப் பூ பொடி
சந்தனப் பொடி

இவ்வளவையும் 1 டிஸ்பூன் எடுத்து கொள்ளவும். உலர்ந்த சருமம் உள்ளவர்கள் பச்சைப் பால் அல்லது பாலாடையிலும் எண்ணெய் பசை சருமத்தை உடையவர்கள் தண்ணீர் மற்றும் முல்தானி மெட்டியுடன் கலந்து சருமத்தில் பூசினால் சுருக்கங்கள் போகும்.

தொடரும்...

# முருங்கக்காய்-கத்திரிகாய்-மாங்காய் சாம்பார்



**தேவையான பொருட்கள்**

துவரம்பருப்பு - 1 கப், . முருங்கக்காய் - 2, உருளைக்கிழங்கு - 3, கத்திரிகாய் - 5, மாங்காய் - 1 (கிளிமூக்கு மாங்காய்), பெரிய வெங்காயம் - 2, தக்காளி - 2, பச்சைமிளகாய் - 2, பூண்டு - 5 பல், மஞ்சள்த்தூள் - 1/2 ஸ்பூன், சாம்பார்த்தூள் - 3 ஸ்பூன், சீரகம் - 1/2 ஸ்பூன், உப்பு - தேவைக்கு.

**தாளிக்க**

எண்ணெய் - 2 ஸ்பூன், கடுகு,உளுந்து - 1/2 ஸ்பூன், வரமிளகாய் - 2, கறிவேப்பிலை - சிறிது, கொத்தமல்லி - சிறிது

**செய்முறை**

- ஒரு கனமான பாத்திரத்தில் துவரம்பருப்பை (நன்கு கழுவிடவும்) போட்டு பருப்பு மூழ்கும் அளவிற்க்கு தண்ணிர் விட்டு அதனுடன் மஞ் சத்தூள், சீரகம் சேர்த்து நன்கு வேக வைக்கவும்.
- பருப்பு முக்கால் பாகம் வெந்ததும் தக்காளி, வெங்காயம், பச்சைமிளகாய், பூண்டு சேர்த்து ஒரு 10 நிமிடம் வேகவைக்கவும்.
- பிறகு நறுக்கிய முருங்கக்காய், உருளைக்கிழங்கு, கத்திரிகாய், மாங்காய் போட்டு வேக வைக்கவும். (காய் போடறதுக்கு முன்னாடி சாம்பாருக்கு தேவையான தண்ணீர் ஊற்றவும்காய் போட்ட பிறகு ஊற்றினால் காய் சரியா வேகாது+சாம்பார் சுவையாக இருக்காது)
- காய் வெந்ததும் சாம்பார்த்தூள் சேர்த்து அத்துடன் தேவையான உப்பு போட்டு நன்கு கொதிக்க விடவும்.
- ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, உளுந்து, வரமிளகாய், கறிவேப்பிலை போட்டு தாளித்து சாம்பாரில் கொட்டி சிறிது நேரம் கொதிக்க விட்டு இறக்கி கொத்தமல்லி தூவினால் அவ்வளவுதான் சுவையான சாம்பார் தயார்.

**குறிப்பு:**

- பருப்பை குக்கரில் வேகவைத்தால் சாம்பாரின் சுவை முழுமையாக கிடைக்காது. (இது எனது கருத்து மட்டும் அல்ல அனுபவம்)
- பாத்திரத்தில் பருப்பு சீக்கிரம் வேக வேண்டும் என்றால் பருப்பு வேகும் போது சிறிது நல்லெண் ணெய் விட்டால் போதும் பருப்பு சீக்கிரம் வெந்துவிடும்.
- மாங்காய் சேர்ப்பதால புளி தண்ணி தேவையில்லை.
- பொருங்காயம் தேவையென்றால் தாளிக்கும் போது சிறிது போடலாம்.



# உருளைக்கிழங்கு வறுவல்

**தேவையான பொருள்கள்:**

சின்ன உருளைக் கிழங்கு - 1 கிலோ, வெங்காயம் - 100 கிராம், தாளிக்க - 4, மஞ்சள் தூள் - 1/2 ஸ்பூன், மிளகாய்த் தூள் - 2 ஸ்பூன்.மல்லித்தூள் - 3 ஸ்பூன், இஞ்சி,பூண்டு விழுது - 1 ஸ்பூன், எண்ணெய் - தேவைக்கு, கடுகு,உளுத்தம் பருப்பு - தாளிக்க, கடலைப் பருப்பு - தாளிக்க, உப்பு - தேவையான அளவு, கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை - சிறிது

**செய்முறை:**

உருளைக் கிழங்கை வேகவைத்து தோலுரித்து கொள்ளவும்.

ஒரு வாணலியில் எண்ணெயை ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, கறிவேப்பிலை, போட்டு தாளித்ததும் அதில் இஞ்சி,பூண்டு விழுது, வெங்காயம் இரண்டையும் போட்டு நன்கு வதக்கவும்.

அத்துடன் தக்காளியையும் சேர்த்து நன்கு வதக்கி பின் உருளைக் கிழங்கையும் சேர்த்து நன்கு கிளறவும்.

அதனுடன் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், மல்லித்தூள், உப்பு என எல்லாவற்றையும் சேர்த்து நன்கு கிளறவும்.

இடைவிடாது கிளறிக் கொண்டே இருக்கவும். பொன்னிறமாக இருக்க வேண்டும் கருகிவிடாமல் பார்த்துக் கொள்ளவும். சிறிது நேரம் கழித்து கொத்தமல்லித் தழை தூவிப் பரிமாறவும்.

# காய்ச்சல் வலிப்பு



வைத்தியகலாநிதி ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - நல்லூர்



காய்ச்சல்வலிப்பு பொதுவாக ஆறு மாதம் முதல் ஆறு வயதுடைய குழந்தைகளையே பாதிக்கின்றது. குழந்தைகள் வளரும் போது காய்ச்சல்வலிப்பு பொதுவாக நின்றுவிடும். எனினும் ஒரு சில குழந்தைகளையே அது தொடர்ந்தும் பாதிப்படையச் செய்கின்றது.

காய்ச்சல்வலிப்பு, காய்ச்சலின் போது உடல் வெப்பநிலை உயர்வதனால், மூளைக் கலன்களில் ஏற்படும் அசாதாரண மாற்றங்களினால், உடல் அவயங்களில் ஏற்படும் அசைவுகளே காய்ச்சல்வலிப்பு ஆகும்.

குழந்தையின் வளர்ச்சிப்படிகள் (Devolop mental stage) சரியாக இருந்தால் காய்ச்சல் வலிப்பினால் குழந்தையின் மூளைவளர்ச்சியில் எதுவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

**காய்ச்சல்வலிப்பின் பொதுவான அறிகுறிகள்.**

- காய்ச்சல்வலிப்பு பொதுவாக உடல் வெப்பநிலை உயர்வாக இருக்கும் போது ஏற்படுகின்றது.
- காய்ச்சல்வலிப்பு, காய்ச்சல் தொடங்கி முதல் 24 மணித்தியாலங்களுக்குள் பொதுவாக ஏற்படுகின்றது.
- கண்கள் மேல் நோக்கி சொருகி காணப்படலாம் அல்லது பக்கவாட்டில் சொருகிக் காணப்படலாம்.
- கைகால்களை சடுதியாக அசாதாரணமாக மடக்கி விரித்தல் அல்லது கால்களை விறைப்பாக வைத்திருத்தல்.
- வாயிலிருந்து நுரை வெளியேறுதல்.
- மலம், சலம் குழந்தை அறியாமலே வெளியேறுதல்.
- பொதுவாக காய்ச்சல்வலிப்பு சில நிமிடங்கள் முதல் அரை மணித்தியாலங்கள் வரை நீடிக்கின்றது.

**காய்ச்சல்வலிப்பு ஏற்படுவதை தவிர்க்கச் செய்யக்கூடியவை.**

காய்ச்சலில் உடல் வெப்பநிலை கூடுவதை தவிர்ப்பதற்காக குழந்தையின் ஆடைகளைக் களைந்து விடுதல் வேண்டும். போர்வையால் போத்தக் கூடாது.

பரசிற்றமோல் பாணியை தகுந்த வைத்தியரின் ஆலோசனைக்கமைய குழந்தையின் வயது, நிறை என்பவற்றிற்கு ஏற்ப கொடுத்தல் வேண்டும்.

பரசிற்றமோல் பாணியை ஆகக் குறைந்தது 6 மணித்தியால இடைவெளியிலேயே கொடுக்க வேண்டும். (அதாவது 24 மணித்தியாலத்திற்கு 4 தடவைகள் மட்டும். மேலதிகமாகவோ, அதிக தடவைகளோ, வைத்திய ஆலோசனை இன்றி பரசிட்டமோல் கொடுத்தல் உடலுறுப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.)

உடல் வெப்பநிலையை குறைப்பதற்காக உடலை நீரினால் துடைக்க வேண்டும். இவ்வாறு துடைப்பதற்கு சாதாரண நீரையே பயன்படுத்தவும். சுடுநீரையோ, குளிர்நீரையோ அல்லது ஏதாவது பதார்தங்களை நீரில் கலந்து பாவிப்பதையோ தவிர்க்கவும்.

நீரினால் நன்றாக கழுத்து, காதின் பிற்பகுதி, நெற்றி, அக்குள் பகுதி, அரைப்பகுதி என்பவற்றை துடைக்கவும், வெப்பம் வெளியேறுவதற்கு இடமளிப்பதற்காக நீரினால் வயிறு, முதுகு பகுதிகளை துடைப்பதை தவிர்க்கவும்.

மேற்கூறியவாறு செய்த பின்பும், காய்ச்சல், வெப்பநிலை குறையாது இருப்பின் வாந்தி, வயிற்றோட்டம், அதிக இருமல், சளி, இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் ஆலோசனை பெறவும்.

**காய்ச்சல்வலிப்பு வந்த பின் செய்யக்கூடியவை.**

- குழந்தையை இடது பக்கமாக சரித்துப் போடவும்.
- தலையை கழுத்து மடியாதவாறு நேராக்கவும்.
- உடையை களைந்து விடவும்.
- வாயிலிருந்து வெளியேறும் நுரையை வெளிப்புறமாக துடைத்து விடவும்.( வாயினுள் கை வைக்க வேண்டாம்)
- வலிப்பு நீடிக்குமாயின் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.

**காய்ச்சல்வலிப்பு இருக்கும் போது செய்யக்கூடாதவை.**

- காய்ச்சல்வலிப்பு வந்தால் பதற்றமடைய வேண்டாம்.
- வாயினுள் உங்கள் விரலையோ அல்லது திறப்பையோ வைக்க வேண்டாம்.
- கைகளில் திறப்பை கொடுப்பதை தவிர்க்கவும்.

**கவனிக்கவேண்டிய ஏனைய விடயங்கள்.**

- காய்ச்சல் இல்லாமல் வலிப்பு ஏற்படுதல்.
- காய்ச்சலுடன் கூடிய வலி அரை மணிநேரத்தின் பின்பும் நீடித்தல்.
- ஒருபக்க கை,கால்களில் மட்டும் அறிகுறி ஏற்படல்.
- அசாதாரண வளர்ச்சிப்படியுடன் கூடிய பிள்ளைக்கு வலிப்பு ஏற்படுதல், என்பன விசேடமாக கவனிக்க வேண்டியவை.

இவ்வாறு இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுதல் நன்று.



# ‘ஹான்ட் பாக்’ இரகசியங்கள்



இப்பொழுது வீதிக்கிறங்கும் ஒவ்வொரு பெண்ணிடமும் எது இருக்கிறதோ இல்லையோ, தவறாமல் இரண்டு பொருட்கள் இருக்கும். அடிக்கடி காதில் வைத்து யாருடனோ கீழ்க்குரலில் குசுகுசுக்க ஒரு செல்பேசி. விதவிதமான நிறத்தில் தோளில் ஒரு கைப்பை (ஹாண்ட் பாக்). இப்படித்தான் எல்லாப் பெண்களும் இப்பொழுது வீதியில் திரிகிறார்கள். வேலை மினக்கெட்டு திரிகிறார்களா, வேலைக்கு திரிகிறார்களா என்பதையெல்லாம் இப்பொழுது அடையாளம் பிடிக்க முடியாது. முன்னர்தான் உத்தியோக அம்மணிகள் தோளில் ஒரு பை கொளுவியிருப்பார்கள். இப்பொழுது ஏ.எல் எடுத்ததும் பெண்கள் முதலில் வாங்கும் பொருட்களில் ஒன்று கைப்பை.

நமது பெண்களின் ‘ஹாண்ட் பாக்’ மோகம் எல்லையில்லாமல் அதிகரிக்க, உற்பத்தியாளர்களும் விதவிதமான ‘ஐயிற்றங்கள்’ தயாரித்து காசு பார்க்கிறார்கள். ஏனோதானோவென தயாராகிக் கொண்டிருந்த கைப்பை, இப்பொழுது எண்ணற்ற விதங்களில் வரத் தொடங்கிவிட்டது. எல்லா பெண்களுமே கைப்பையுடன் திரிந்தாலும், அவற்றின் வகைகளை வைத்து, பெண்களின் நிலையை கணிப்பிடலாம். வயது, தொழில் போன்றவற்றை கைப்பையை வைத்தே கணக்கிடும் கில்லாடி கணக்கு இது.

**புது அப்பொயின்ற்மென்ற்ஸ்:**

ஒரு பெண் அழகாக சாறி உடுத்தி, அதை அப்பப்ப சரி செய்து கொண்டிருந்தால் அல்லது சல்வார் போட்டு ஹான்ட் பாக் கொழுவியிருந்தால் உடனே முடிவு செய்யலாம், அவர் எங்கோ வேலைக்கு செல்ல ஆரம்பித்திருக்கிறார் என. அதிலும் ஹான்ட் பாக் சற்று ஊதியிருந்தால், உள்ளே மத்தியானத்திற்கு புழுங்கலரிசி சோறு கொன்போர்ம். இந்த வகையானவர்களிற்கு தீனிபோடத்தான் கடைகளில் அதிக ஹான்ட் பாக் வகைகள் தொங்குகின்றன. சற்று மலிவாகவும் கிடைக்கின்றன என்பது பெண்களிற்கு கூடுதல் மகிழ்ச்சி.

**கோலிஜ் கோமலாக்கள்:**

படிக்கப் போவதென்றால் ஒரு புத்தகப்பை வேண்டுமென்ற காலம் இரண்டு மூன்று வருடங்களுடன் வழக்கொழிந்து விட்டது. கன்னாபின்னா ஆடையணிந்து பக்கவாட்டில் தொங்கும் நீளமான ஹான்ட் பாக் கொழுவியிருந்தால், அறுபது கிலோமீற்றர் கடந்து ரவுணுக்கு மைக்ரோசொப்ற் வேர்ட் மாதிரி ஏதாவதொன்று படிக்க வரும் ரகம் என்று அர்த்தம். நீளமான நாடாவுடனான சிறிய பையாக இருக்கும். பெண்களில் இடுப்புவரை நீண்டிருக்கும். பல்கலைகழகம் போகிறவர்கள், உயர்கல்வி நிறுவனங்களிற்கு போகிறவர்கள், வெளிநாட்டு மாப்பிள்ளையை பதிவுத்திருமணம் செய்துவிட்டு நகரத்திற்கு டொச், ஜேர்மன் படிக்கப் போகிறவர்களும் அதிகம் இதைத்தான் பயன்படுத்துகிறார்கள். பெரும்பாலும் பொதுவான நிறமுடையவற்றைத்தான் பாவிக்கிறார்கள். சிலர் துணி வடிவத்திலான ஹான்ட் பாக்குகளை அல்லது டிசைனும் விலையும் அதிகமுள்ள முத்துக்கல்லு மினுமினுப்பவற்றை பாவிக்கிறார்கள்.

**சொப்பிங் சொப்பனசுந்தரிகள்:**

பெண்களின் வாழ்வில் திருமணம், பூப்புனித நீராட்டுவிழாவிற்கு அடுத்த முக்கியத்துவம் வாய்ந்தது சொப்பிங். கடைக்கு சென்று கடையையும், கணவனின் பேர்ஸையும் காலி செய்யும் அம்மணிகள் கொஞ்சம் ‘நாகரிக’மானவர்கள். வாய் நிறைய உதட்டு சாயம், மூக்குத்தி, ஸ்ரைட் தலைமுடி ரக பெண்கள் ஹான்ட் பாக்கில் மட்டும் இலகியர்களா? முத்துக்கல், நூல் டிசைன் நிறைந்த ஹான்ட் பாக்தான் இந்த வகையானவர்களின் தெரிவு. உடலுக்கு குறுக்காக இடதுபக்க தோளில் கொழுவி வலதுபக்கத்தில் தொங்க விடுவார்கள். சைசும் மிகச் சிறுசுதான். பணமும், செல்பேசியும்தான் வைக்கலாம்.

**அலுவலக அன்ரீஸ்:**

அன்ரீஸ் ஆனாலே பெண்கள் எல்லா விடயத்திலும் பக்குவமானவர்களாக காட்டிக் கொள்வார்கள். நடை, உடை, பாவனைகளிலும் நளினமான பக்குவம் வரும். அந்த வயதில் பாவிக்கும் ஹான்ட் பாக்குகள் பெரும்பாலும் ஒரே வகையானதாகத்தான் இருக்கும். வேலைக்கு செல்லும் அந்த வயதினர் நீளமான சிறிய உருவமுடைய ஹான்ட் பாக்குகளையே பயன்படுத்துகிறார்கள். சிலர் கட்டையான பைகளையும் பயன்படுத்துவார்கள். பொதுவாகவே கறுப்பு, வெள்ளை, மரூன் போன்ற நிறங்களையே பயன்படுத்துவார்கள்.

இதெல்லாம் வயதுக்கேற்ற தெரிவுகள். என்றாலும் பொதுவாகவே இப்பொழுது பெண்களின் ஹான்ட்பாக் தெரிவில் ‘தெறிமாஸாக’ இருப்பது பொது நிறங்களில் முத்துக்கள் பதித்த பைகள் அல்லது துணியினால் ஆன நீளமான பைகள்தான்.





## தெற்காசிய விளையாட்டு போட்டி

# இலங்கையின் 'தங்கமீன்கள்'

'தங்க மக்கள்' கிமிகோ, அபேசிங்க

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் ஹீரோவாக எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்திருக்கிறார் மத்தியு அபேசிங்க. தெற்காசிய விளையாட்டு போட்டிகளில் அவர் அள்ளியது 7 தங்கங்கள். இம்முறை இவரளவிற்கு யாரும் தங்கம் அள்ளவில்லை.

அபேசிங்கவின் தங்கவேட்டையால்த்தான் இலங்கையின் தங்க கணக்கு கணிசமாக உயர்ந்தது.

இந்தியாவின் குஜராத்தில் நடக்கும் 12வது தெற்காசிய விளையாட்டு போட்டிகளில் தனிநபர் தங்க வேட்டையில் அபேசிங்கதான் 'வெறியாட்டம்' ஆடினார். 50,100, 200 மீற்றர் பரீ ஸ்ரைல், 100 மீற்றர் வட்டர் பிளை, 200,400 மீற்றர் இன்டிவிடுவல் மிட்லி போட்டிகளில் எல்லாம் அபேசிங்க தண்ணீருக்குள் மீனாகி தங்க மகனானார். அது தவிர அவரது கணக்கில் மேலுமொரு வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் சேர்த்துக் கொண்டார்.

தங்க வேட்டையாடிய இந்த மீன் மனிதனிற்கு இப்பொழுது பத்தொன்பது வயதுதான் ஆகிறது. கடந்த வருடம் நடந்த FINA World Championships போட்டிகளின் தகுதிச் சுற்றில் கலந்து கொண்டிருந்ததன் மூலம், இந்த சர்வதேச போட்டியில் கலந்து கொண்ட முதல் இலங்கையர் என்ற பெருமையும் அபேசிங்கவினதுதான்.

அபேசிங்க ஏழு தங்கப்பதக்கங்கள் அள்ளியதன் மூலம் தெற்காசியப் போட்டிகளில் நீச்சல் பிரிவில் அதிக தங்கமள்ளிய வீரர் என்ற சாதனையையும் சொந்தமாக்கியுள்ளார். 1991இல் யூலியன் போல்ட் ஆறு தங்கங்களை அள்ளியதே இதுவரை சாதனையாக இருந்தது. அந்த 25 வருட சாதனையை அசால்ட்டாக உடைத்தெறிந்திருக்கிறார் அபேசிங்க. தங்கம் வென்ற போட்டியொன்றில் தெற்காசிய சாதனையொன்றையும் நிலைநாட்டியுள்ளார்.

ஆண்கள் பிரிவில் அபேசிங்க அன்ட் கோ தங்கவேட்டையாட, பெண்கள் பிரிவில் ரஹீம் சிஸ்டர்ஸ் 'போட்டி வேட்டை'யாடினார்கள். கிமிகோ ரஹீம், மஹிகோ ரஹீம் சகோதரிகள் போட்ட போட்டி நீச்சலில் அரங்கமே அதிர்ந்தது. கிமிகோவின் கணக்கில் மூன்று தங்கங்கள். அதிலும் 50 மீற்றர் பிரி ஸ்டைலில் தங்கம், வெள்ளி அக்கா, தங்கைக்கே. கிமிக்கோவின் கணக்கில் ஒரு தெற்காசிய சாதனையும் அடக்கம்.



'குவஹார்டி' கலக்கல்



நீச்சல் சகோதரிகள்







மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வன்மை போட்டிகள் கடந்த 17ம் திகதி நடந்தது.

சுட்டு

மனிதராய்ப் பிறந்தோர் வேண்டும் ஒரே வரம் மகவுவரம் எனலாம். நாம்வாள்ந்த வாள்விற்கு சாண்றாவது இன்னோர் உயிர் தான் என்பர். இப்படிப்பட்ட குழந்தைவரம் கிடைக்கப்பெறாதவர் படும் வேதனையும் தவிப்பும் சொல்லில் அடங்கா. வைத்தியச் செலவுகள் தொடங்கிச் சலித்துப்போய் இறையே கதிஎன ஆலயங்கள் தோறும் சென்று தொளுதும். பிராற்தனைகள் செய்தும் செல்வங்களைப் பெற்று வெற்றிகண்டோர் பலர். அப்படியானால் எப்படி இவ் ஆலயங்களில் பிராற்தனைகள் நிறைவேற்றை யில் குழந்தை வரம் கிட்டுகிறது? அப்படியான ஆலயங்கள் இலங்கையில் உண்டா? பிராற்தனைகள் மூலம் குழந்தவரம் கிட்டும் என்றால் அதற்குவிஞ்ஞான ரீதியான காரணங் களுண்டா என்பதுதான் இந்த அலசல்.

இலங்கையில் குழந்தை வரத்திற்குப் பிரசித்திபெற்ற ஆலயங்களிள் ஒண்றுதான் எல்லப்ப மருதங்குளம் சித்தி வினாயகர். வவுனியாவிற்குச் சென்று "குழந்தைவரம் தரும் எல்லப்பமருதங்குழச் சித்திவினாயகர்" எனக் கேட்டால் தெரியாதவர்கள் இல்லை எனலாம். குழந்தைச் சித்தையை அளிப்பதால் பெற்ற பேரிற்குப்பின்னால் ஒரு சிறு வரலாற் றைக் கூறுவர் அக் கிராம மக்கள். எல்லப்ப மருதங்குள்த்திற்கு குடியேறிய கிராம வாசிகள் ஒருநாள் ஓர் நிகள்வைக் கண்டனர். குறித்த அவ்விடத்தில் இருந்த கிணற்றில் ஓர் யானை தனது துதிக்கையை இறக்கி அந்த நீரைத் தன் தலைமேல் இறைத்துக் கொண்டது. பின் அங்கு வளிபட வைத்திருந்த கல் ஒன்றை மூண்று முறை சுற்றி வந்து முன்னால் விளுந்து ஒரு குட்டி யானையை ஈன்றெடுத்தது. அதிலிருந்து அவ்விடம் சித்திவினாயகர் ஆலயமாகப் பிரபாலிக்கப்பட்டது. பிற்பட்ட காலங்களில் பலரும் அக் கோவிற்கிணற்றில்க் குளித்து மூண்றுமுறை சுற்றிவந்து குழந்தைப்பாக்கியம் பெற்றனர்.



# குழந்தைவரம்தரும் சித்தி வினாயகர்



விளைவு. நமது உடலியன் நோய்களை நாமே மாற்றிக் கொல்ளும் திறனை இயற்கை நமக்களித்திருக்கிறது என்பர். குறிப்பான சில விடயங்களை உற்று நோக்குங்கள். சித்தர்களுக்கும், ரிசிகளிற்கும் என்றாவது நோய்கள்வந்ததாக நீங்கள் கண்டதுண்டா?, காடுகள், மேடுகள், மலைகள், மளை, வெயில் என எதையும் பொருட்படுத்தாது திரியும் இவர்களை எண்றாவது வைத்திய சாலைகளில் கண்டதுண்டா? இதற்குக் காரணம் என்ன? பஞ்ச பூதங்களால் ஆன நமது உடல் பஞ்ச பூதங்களுடன் சங்கமித்து வாளப்பலகிக்கொண்டால் நமக்கு எந்நோயும் வரது என்பதே இவர்கள் கொள்கை. நமது உடலிற்கும் உயிரிற்கும் பிரபஞ்ய சக்திக்கு மிடையில்ப் பேணப்படும் தொடர்பை வளிப்படுத்தவே அனைத்து சமய வளிபாடு களும் உதவுகின்றன. உலகைச் சுற்றிய காந்தப் புலங்கள் போலவே மனித உடலைச் சுற்றியும் புலங்கள் அமைந்திருக்கும் இந்த இயக்க செயற்பாடு "வைபிரேசன்" எனக் கூறப்படும். அதாவது சூளலிற்கும் அதன் தன்மைக்கு மேற்ப நம் உடலில் அதிர்வலைகள் உள்வாங்கப்படும். இப்படியான நல்ல அதிர் வலைகளை உருவாக்க வல்லதும், அவ்வதிர் வலைகளினால் குழந்தைப் பாக்கியம் தொடர் பான பிணிகளைத் தீற்க வல்லதுமாகவும். வேதியற்தாகமடைந்த சக்திவாய்ந்த நீரினால்





இது எப்படிச் சாத்தியமாகிப்போகும் என்பதை சற்று விஞ்ஞான ரீதியிலாகப் பாற்கலாம். இவ் வாலயம் அமைந்திருக்கும் பிரதேசம், கருங்கற்பாறைகள் நிறைந்தது. முன்பொரு காலத்தில் எரிமலை வலய மாக இருந்திருக்கக் கூடும். நமது இந்து ஆலயங்களில் கொடுக்கும் தீர்த்தம் முக சக்திவாய்ந்ததென்றும் சுவாமியின் கருங்கற் சிலையில் அர்ச்சிக்கப்பட்டதால் அது சக்தி பெறுமென்றும் கூறப்படுகிறது. புவிச்சுளற் சியில் காந்தப்புலங்களும், மந்திர உச்சாடனத் தின் விளைவுகளும், அபிசேகத்திற்காகப் பயன்படுத்தும் பொருட்களின் வேதியற் தாக்கமும் சக்திவாய்ந்ததாக மாற்றூம். இப்படி இருக்கையில் நிலத்தடி முற்றாக கருங்கல்லாலான இப் பிரதேசத்தின் தண்ணீர் பல்லண்டுகால வேதியற்தாக்கங் களிற்குட்பட்டதால் ஒரு வேளை மிகு மருத்துவக் குணம் உடையதாக இருக்கலாம்,

சித்தர்களும், ரிசிகளும் கூறுவது என்ன? அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றல் என்பது பரம் பொருளுடன் சங்கமித்தலின் நிவற்தி செய்யவல்லதுமாகவே இவ் ஆலயம் இருக்கக்கூடும் எனலாம்.

யுத்தகாலத்தின் பின்னர் மீழ்புனர மைப்பிற்காகக் கட்டப்பட்டுவரும் இவ்வாலய மானது இன்னமும் நிறைவுபெறாத நிலை யில்க் கானப்படுகிறது. சில நிதிப்பற்றாக் குறை தொடர்பான பிரச்சினைகளல் இன்னமும் கோவில் வேலைகள் நிறைவு செய்யப்படவில்லை என்றும். நிறைவடைந் தபின் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்றும் கூறினார் ஆலய தர்மகர்த்தா. அந்தக்காலத்தில் அவ்வளவு தொழில்னுட்ப வசதி இல்லாமை யால் இவ் ஆலயத்தின் பிரசித்தம் வெளியூர் களுக்குத் தெரியாதவிடத்து தற்போதைய காலகட்டத்தில் ஈளத்து ஆலயங்களில் மகவு வரத்திற்கான் ஆலயமாக பிரசித்தி பெற்று வருகிறது. எஞ்சி யிருக்கும் வேலைகளையும் முடித்து விரைவில் கும்பாபிஷேகத்தை நடத்திப் பலரின் ஆண்ம விருட்சங்களைப் பலப்படுத்த அடியவர் ஆதரவையும் வேண்டி நிற்கிறார் இந்த சந்ததி தரும் சித்திவினாயகர் பெருமான்.



பட்டிருப்பு கல்விவலயத்திற்குட்பட்ட மகிளூர்முனை சக்தி வித்தியாலயத்தில் சாரணர்களிற்கு சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 17ம் திகதி நடந்தது. இங்கு முதற்தடவையாக சின்னம் சூட்டும் நிகழ்வு நடந்தது குறிப்பிடத்தக்கது.



கணபதிப்பிள்ளை அசோகன்
asokan 2301@gmail.com



# வலசைப்பறவைகளும் வட பகுதி சுற்றுலாத்துறை அபிவருத்தியில் அவற்றின் முக்கியத்துவமும்




நாள் வலசைப்பறவைகளும் வட பகுதி சுற்றுலாத்துறையும் என்பது பற்றி இப்போது எழுதுவதற்கு முக்கிய காரணம் இந்த தொடரை வாசித்து என்னுடன் தொடர்பு கொண்ட பலர் வலசைப்பறவைகளைப் பற்றி தாம் அறிவதால் அல்லது அவற்றை பாதுகாப்பதால் தமக்கு என்ன நன்மை என்று என்னிடம் கேட்டிருந்தமையே ஆகும்.

உண்மையில் வலசைப்பறவைகளாலும் எமது உள்நாட்டு பறவைகளாலும் மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் பல சூழலியல் நன்மைகள் கிடைக்கின்றன.

ஆனால் பலர் வலசைப்பறவைகள் பற்றிய அறிவால் தமக்கு பணம் கிடைக்குமா என்று என்னிடம் நேரடியாகக் கேட்டதால் இந்த அத்தியாத்தில் வலசைப்பறவைகளினால் கிடைக்கும் பொருளாதார நன்மைகளில் மிக முக்கியமான நன்மையான பறவைளுடன் தொடர்புடைய சுற்றுலாத்துறையினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைப்பற்றி உங்களுக்கு கூற உள்ளேன். அது பறவைகள்சார் சுற்றுலா (Bird tourism) எனப்படும்.

உண்மையில் சுற்றுலாத்துறையில் நீங்கள் ஈடுபடுவீர்களேயானால், அதுவும் வலசைப் பறவைகள் பற்றிய அறிவும் உங்களிடம் இருக்குமாயின் உங்களிடம் பணம் கொழிக்கும். ஏனெனில் இலங்கையின் வடபகுதிக்கு வந்து போகும் வலசைப்பறவைகளை மையமாக வைத்து பாரிய பறவைகள் சுற்றுலாத்துறை மேம்பாடு (BIRD WATCHING TOUR) உலக ளாவிய ரீதியில் தற்போது நடந்து வருகிறது.

ஒரு வெளிநாட்டவர் (அதுவும் பணக்காரர்) தனது சுற்றுலாவை டொலர் அல்லது யுரோ அல்லது ஸ்ரேலிங் பவுண் இல் திட்டமிடும் போது ஒரு சுற்றுலா வழிகாட்டிக்கென்று (TOUR GUIDES) எவ்வளவு ஒதுக்குவார் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அதனை இலங்கை ரூபாயில் மாற்றிப்பாருங்கள், உங்களுக்கு புரியும் எவ்வளவு பெரிய பணம் என்று.

பறவைகள் சுற்றுலாத்துறைக்கு பயணிகளுக்கு பறவைகளை காட்டுவதற்காக சில உருப்பெருக்க மற்றும் தொலைநோக்கு கருவிகள், கமராக்கள் (Binoculars, Fields scope, and Zoom lense camera) பறவைகளை அடையாளம் காண்பதற்கு தேவையான பட மற்றும் குறிப்புப்புத்தகங்கள் (Birds field giuide book) ஆகியன இருந்தால் போதும்.

ஆனால் சுயாதீனமாக தொழில் செய்வதற்கான முக்கியமான நிபந்தனை, நீங்கள் அங்கீகாரம் பெற்ற சுற்றுலா வழிகாட்டியாக பதிவு செய்து இருக்க வேண்டும்.

**வடமாகாண முதலமைச்சர் அலுவலக, சுற்றுலா வழிகாட்டிகளை(TOUR GUIDES) பயிற்றுவிப்பது சம்பந்தமான அறிவிப்பு**

நான் இந்த அத்தியாத்திற்கு 'வலசைப் பறவைளும் வட பகுதி சுற்றுலாத்துறை அபிவருத்தியில் அவற்றின் முக்கியத்துவமும்' என்ற தலைப்பிட்டபோது சுற்றுலா வழிகாட்டிகளை (TOUR GUIDES) பயிற்றுவிப்பது சம்பந்தமாக வடமாகாண முதலமைச்சரின் அலுவலக விளம்பரம் வரும் என்று எண்ணியிருக்கவில்லை. அது தற்செயலாக நிகழந்த ஒரு நிகழ்வு ஆகும்.

நான் 'வலசைப்பறவைளும் வட பகுதி சுற்றுலாத்துறை அபிவருத்தியில் அவற்றின் முக்கியத்துவமும்' என்ற தலைப்புக்காக இலக்கிய ஆய்வு (Literature Survey) மற்றும் ஆவணங்களை பார்ப்பதற்காக யாழ்ப்பாண பொது நூலகம், மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றில் எனது தேடல்களையும் இணைய தேடல்களையும் மேற்கொண்டு இருந்தபோது, கடந்த 13 ஆம் திகதி தினசரியொன்றில் சுற்றுலா வழிகாட்டிகளை (TOUR GUIDES) பயிற்றுவிப்பது சம்பந்தமான விளம்பரம் ஒன்றை வடமாகாண முதலமைச்சரின் அலுவலகம் பிரசுரித்திருந்தனைக் கண்டேன்.



இந்தக்கட்டுரைத்தொடரை வாசிப்பவர்கள் (குறிப்பாக இளைஞர்கள்) அந்த விளம்பரத்தின் விடயங்களை அறிந்து பயன் பெறுவதற்காக அதன் சாரம்சத்தினை இங்கு தருகிறேன்.

**சுற்றுலா வழிகாட்டிகளுக்கான (TOUR GUIDES) முழுநேரப் பயிற்சி, இலவசமாக கொழும்பில்**

அந்த விளம்பரத்தில் 4 மாதங்களுக்கு சுற்றுலா வழிகாட்டிகளுக்கான (TOUR GUIDES) முழுநேரப் பயிற்சி இலவசமாக கொழும்பில் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அங்கீகாரம் பெற்ற சுற்றுலா வழிகாட்டியாக பதிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழச்சித்திட்டம் (UNDP) பகுதி நிதியுதவி செய்கிறது.

பயிற்சி நிறைவில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் வடமாகாணத்தில் காணப்படும் சுற்றுலா பிரதேசங்களுக்கு வழிகாட்டியாக நியமிக்கப்படுவார். இப்பயிற்சியினை பூர்த்தி செய்தவர்களின் தொடர்பு இலக்கங்கள் மாகாணசபையின் இணையத்தளத்திலும் மற்றும் சுற்றுலா தகவல் திரட்டுகளிலும் வெளியிடப்படும். அதன் மூலம் பயண செயற்பாட்டாளர்கள் (TOUR OPERATORS) நேரடியான தொடர்புகளை சுற்றுலா வழிகாட்டிகளுடன் பேணுவதன் மூலம் அவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த விளம்பரம் கூறுகிறது.

**வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் பறவைசார் சுற்றுலாவில் விசேட கவனம் எடுத்து அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏனைனில் வேறு ஒரு பிரதேசத்திலும் செறிந்தருக்காத அதிகளவு பறவைகள் இங்கு இயற்கையாக உள்ளன.**

இளைஞர்கள் பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ சுற்றுலாத்துறையில் வேலை செய்யலாம். அவர்கள் பொழுது போக்காகவும் வருமானத்துக்காகவும் இந்த சுற்றுலாத் துறையை பயன்படுத்தலாம்.

**பறவைகள் சார் சுற்றுலா (Bird tourism) மேலும் கோருபவை**

வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் பறவைசார் சுற்றுலாவில் விசேட கவனம் எடுத்து அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏனைனில் வேறு ஒரு பிரதேசத்திலும் செறிந்தருக்காத அதிகளவு பறவைகள் இங்கு இயற்கையாக உள்ளன.

வடமாகாண சபையின் இணையத்தளத்தை பார்த்த போது அதில் coffee Book என்று அழைக்கப்படும் சுற்றுலா வழிகாட்டி ஆவணத்தில் பறவைகள் சார் சுற்றுலாவுக்காக சுண்டிக்குளம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்கள் மாத்திரம் காட்டப்பட்டுள்ளது.

**கட்டாயம் வர வேணும்**

இந்த குடிபெயர் பருவகால முடிவடைய முன்னர் இது சம்பந்தமான முடிவுகள் எடுக்கப்படுமாயின் அனைத்துப் பங்காளர்களுக்கும் பல நன்மைகள் கிடைக்கும் என துறைசார் நிபுணர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் வடமாகாண பறவைகள் சார் சுற்றுலாத்துறையின் வெற்றியும் இலாபமும் வலசைப்பறவைகள் என்றும் அழைக்கப்படும் குடிபெயர் பறவைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. கடந்த 5 வருட ஆய்வில் நான் பெற்ற முடிவுகளின்படி இப்போது வடமாகாண அனேக கடல் நீரேரிகளில் அழகான பூக்கள் விதைத்த மாதிரி இருக்கும் வலசைப்பறவைகள் கூட்டங்கள் மார்ச் மாதம் முடிய ஏறத்தாழ முற்றாக காணாமல் போய்விடும்.

(வலசைப்பறவைகள் அடுத்த வாரமும் பறக்கும்)





# நவீன கால்நடை தீவன முறைகள்



கால்நடைகளிற்கான பசுந்தீவன உற்பத்தி முறை தொடர்பான பயிற்சிநெறியொன்று கிளிநொச்சியில் நடந்து முடிந்துள்ளது. கடந்த 18.02.2016 அன்று வடமாகாண விவசாய அமைச்சினால் நடத்தப்பட்ட இந்த பயிற்சிநெறி கால்நடை வளர்ப்பவர்களிற்கு பெரும் பயனுடையதாக அமைந்துள்ளது.

பொதுவாகவே நம்மவர்கள் கால்நடை வளர்க்கும்போது புல், வைக்கோல், இலை, குழைகளை அப்படியே போடுவதுதான் வழக்கம். ஆனால் இந்தமுறை வீணாண விரயத்தை ஏற்படுத்துவது. வினைத்திறனுடைய கால்நடை வளர்ப்பிற்குதீவனமுறையில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்ததன் அடிப்படையில், இந்த பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டதென்கிறார்கள் விவசாய அமைச்சு அதிகாரிகள்.

நவீன தீவன முறைமையில் புல், வைக் கோல், இலை, குழைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு சீனி, தவிடு, உப்பு என்பவற்றை அதன்மேல் தூவி உணவாக கொடுப்பதே சிறந்தது. ஆந்த தீவனத்தை ஆடு, மாடுகள் முழுமையாக உட்கொள்வதுடன், பால் உற்பத்தியும் அதிகரிக்கும். இது பற்றிய அறிமுகமும், புல் நறுக்கும் இயந்திரத்தை கையாள்வது பற்றிய பயிற்சியுமே கிளிநொச்சியில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த பதின்னான்கு கால்நடை வளர்ப்பாளர்களை அடையாளம் கண்டு, அவர்களிற்கு தலா 70,000 ரூபா பெறுமதியான புல் நறுக்கும் இயந்திரங்களை வழங்கியிருந்தது. இதனை எப்படி பயன்படுத்துவது என்ற பயிற்சியின் மூலம், வினைத்திறனுள்ள கால்நடை வளர்ப்பிற்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது.

அன்றைய பயிற்சிநெறியின்போது, உணவின் பசுமை குறையாமல் நீண்டநாட்கள் பாவிப்பதற்கான குழித்தீனி முறைபற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிநெறியின் தொடக்க அமர்வை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைத்தார்.







'இயற்கையுடன் விவசாயம் தீங்கற்ற எதிர்காலம்' என்ற தொனிப்பொருளில் கடந்த 18ம் திகதி வாகரையில் பேரணியும், கலைநிகழ்வுகளும் நடந்தது. நஞ்சற்ற உணவு உற்பத்தியை வலியுறுத்தி ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டன.





சிறியளவில் நெற் பயிர்செய்கை செய்யும் விவசாயிகளிற்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது கிளிநொச்சி இளைஞனின் தயாரிப்பான அருவி வெட்டும் இயந்திரம். இலகுவான அறுவடைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது அவர் தயாரித்துள்ள புதிய அரிவு வெட்டும் இயந்திரம். அதன் பரீட்சார்த்த முயற்சி வெற்றியீட்டியுள்ளது. கிளிநொச்சி கரடிப்போக்கில் ஒட்டு நிறுவனம் நடத்திவரும் காண்டீபன் எனும் இளைஞரே இந்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.










இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 21.02.2016 அன்று வெளியிடப்பட்டது